بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 9

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

12 ஜமாதுஸ்ஸானி 1439 ஹிஜ்ரி கமரி   1 அமான் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

1 மார்ச் 2018


### அல்லாஹ்வின் கட்டளை

لَا تَعۡبُدُوۡنَ اِلَّا اللّٰہَ

وَبِالۡوَالِدَیۡنِ اِحۡسَانًا

وَّذِی الۡقُرۡبٰی

وَالۡیَتٰمٰی وَالۡمَسٰکِیۡنِ

நீங்கள் அல்லாஹ்வை தவிர வேறெதையும் வணங்கக் கூடாது. பெற்றோர்கள், உறவினர்கள், அனாதைகள், ஏழைகள் ஆகியோரிடத்து நன்முறையில் நடந்து கொள்ளுங்கள்.

(அதிகாரம் அல் பக்கரா : 84)

### அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**ஆற்றல், அருள், இறை நெருக்கம் ஆகிய அடையாளங்கள் உமக்கு அளிக்கப்படுகின்றன. அருள், பேரருள் ஆகிய அடையாளங்கள் உமக்க வழங்கப்படுகின்றன. வெற்றி வாகையின் திறவுகோல் உமக்கு கிடைக்கிறது. வானத்திலிருந்து வரும் அவர் அருளுக்குரியவராக இருக்கின்றார். அவர் உயர்ந்த தகுதியிலுள்ள மிகவும் கண்ணியத்திற்குரிய நேசத்திற்குரிய புதல்வராவார். مَظۡهَرُ الۡاَوَّلِ وَالۡاٰخِرِ۔ مَظۡهَرُ الۡحَقِّ وَالۡعُلَاءِ کَاَنَّ اللّٰہَ نَزَلَ مِنَ السَّمَاءِ**

**[அவர் ஆரம்பம், முடிவின் தோற்றமாகவும், உண்மை உயர்வின் தோற்றமாகவும் இருக்கின்றார். அல்லாஹ் வானிலிருந்து இறங்கி வந்தது போன்று இருக்கும்]**

## ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்பான முன்னறிவிப்பு

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் 20 பிப்ரவரி 1886 -ல் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார்கள். அதில் 'வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி' தொடர்பாக ஒரு மகத்தான முன்னறிவிப்பைப் பற்றிக் குறிப்பிட்டவாறு அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

எல்லாவற்றிற்கும் ஆற்றல் பெற்றுள்ள கம்பீரமிக்க கருணையுள்ள மேலான இறைவனாகிய அல்லாஹ் (جَلَّ شَانُہٗ وَعَزَّ اِسۡمُہٗ) தனது இறையறிவிப்பின் மூலமாக என்னை நோக்கி இவ்வாறு கூறினான்: அதாவது நீர் என்னிடம் கேட்டதற்கிணங்க நான் அருளின் ஓர் அடையாளத்தை உமக்குத் தருகின்றேன். நான் உமது மன்றாடல்களை செவியுற்றேன். மேலும் நான் என் அருள்களால் உமது துஆக்களை ஏற்றுக் கொண்டேன். (லூதியானா, ஹோஷ்யார்பூரை நோக்கி நீர் மேற்கொண்ட) உமது பயணத்தை உமக்கு அருளுக்குரியதாக ஆக்கினேன். எனவே ஆற்றல், அருள், இறை நெருக்கம் ஆகிய அடையாளங்கள் உமக்கு அளிக்கப்படுகின்றன. அருள், பேரருள் ஆகிய அடையாளங்கள் உமக்கு வழங்கப்படுகின்றன. வெற்றி வாகையின் திறவுகோல் உமக்கு கிடைக்கிறது. வெற்றி பெற்றவரே ! உம்மீது சாந்தி உண்டாவதாக. வாழ்க்கையை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதற்காகவும், கல்லறைகளில் அமுங்கிக் கிடப்பவர்கள் வெளியில் வருவதற்காகவும் இறைவன் இதை கூறியிருக்கிறான். மேலும் இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பு, அல்லாஹ்வுடைய வார்த்தையின் அந்தஸ்து மக்களுக்கு வெளிப்படுத்துவதற்காகவும், உண்மை தனது எல்லா அருள்களுடனும் வந்து விடுவதற்காகவும், பொய் தனது அனைத்து தீய சகுனங்களுடனும் வெருண்டோடி விடுவதற்காகவும் இறைவன் இதைக் கூறியுள்ளான்.

மேலும் நான் ஆற்றல் மிக்கவன் எனவும், விரும்பவுதை செய்கின்றேன் எனவும் மக்கள் புரிந்து கொள்ளட்டும். நான் உம்முடன் இருக்கிறேன் என அவர்கள் உறுதி கொள்ளட்டும். மேலும் எவர்கள் இறைவனுடைய இருப்பு பற்றி நம்பிக்கை கொள்வதில்லையோ, மேலும் இறைவனுடைய மார்க்கத்தையும், அவனுடைய வேதத்தையும் அவனுடைய தூய தூதர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களையும் மறுத்தல் மற்றும் பொய்ப்படுத்துதல் என்ற பார்வையுடனும் பார்க்கிறார்களோ அவர்களுக்கு ஓர் அடையாளம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், குற்றவாளிகளின் வழியை வெளிப்படுத்துவதற்காகவும் இறைவன் இதைக் கூறியுள்ளான்.

எனவே உமக்கு ஒரு நற்செய்தி ! கம்பீரமான தூய ஒரு மகன் உமக்கு வழங்கப்படுகிறது. ஒரு தூய குழந்தை உமக்குக் கிடைப்பார். அந்த மகன் உமது வித்திலிருந்தே உமது சந்ததி, வழித்தோன்றலாக இருப்பார். அழகிய, தூய மகன் உமது விருந்தினர் வருகிறார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீர் என்பதுமாகும். அவருக்கு பரிசுத்த ஆவி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் அவர் அசுத்தத்திலிருந்து தூயவராக இருப்பார். அவர் அல்லாஹ்வின் ஒளியாவார். வானத்திலிருந்து வரும் அவர் அருளுக்குரியவராக இருக்கிறார். அவருடன் அருள் இருக்கிறது. அது அவர் வரும்போது உடன் வரும்.

அவர் கண்ணியத்திற்குரியவராகவும், மகத்துவம் கொண்டவராகவும், செல்வம் உடையவராகவும் இருப்பார். அவர் உலகில் வருவார். மேலும் தமது மஸீஹின் ஆவியினாலும் உண்மையின் ஆவியின் அருளினாலும் அதிகமானோரை நோயிலிருந்து தூய்மைப்படுத்துவார். அவர் அல்லாஹ்வின் வார்த்தையாவார். ஏனெனில் இறைவனுடைய கருணையும் தன்மானமும் அவரை கண்ணியத்திற்குரிய வார்த்தையுடன் அனுப்பியிருக்கிறது.

அவர் மிகவும் புத்திக் கூர்மை உள்ளவராகவும், நுண்ணிய அறிவுடையவராகவும் இருப்பார். மேலும் உள்ளத்தால் சகிப்புத்தன்மை கொண்டவராகவும் இருப்பார். மேலும் உள்ளத்தால்சகிப்புத்தன்மை கொண்டவராகவும் இருப்பார். மேலும் வெளிப்புறமான, உட்புறமான ஞானங்களால் அவர் நிரப்பப்படுவார். மேலும் அவர் மூன்றை நான்காக்குபவராக இருப்பார். (இதன் பொருள் புரியவில்லை).

திங்கள்கிழமை, வாழ்த்துக்குரிய திங்கள் கிழமை. அவர் உயர்ந்த தகுதியிலுள்ள மிகவும் கண்ணியத்திற்குரிய புதல்வராவார். مَظۡهَرُ الۡاَوَّلِ وَالۡاٰخِرِ۔ مَظۡهَرُ الۡحَقِّ وَالۡعُلَاءِ کَاَنَّ اللّٰہَ نَزَلَ مِنَ السَّمَاءِ அவர் ஆரம்பம், முடிவின் தோற்றமாகவும், உண்மை, உயர்வின் தோற்றமாகவும் இருக்கிறார். அல்லாஹ் வானிலிருந்து இறங்கி வந்தது போன்றிருக்கும். அவருடைய வருகை மிகவும் அருளுக்குரியதாகவும், இறை கம்பீரத்தை வெளிப்படுத்துவதற்குக் காரணமாகவும் அமையும். இறைவன் தன் திருப்தி எனும் நறுமணத்தால் மணம் கமழ வைத்த ஒளி வருகிறார். நாம் அவரிடத்தில் நமது ஆவியை ஊதுவோம். இறைவனின் நிழல் அவர் தலை மீது இருக்கும். அவர் மிக விரைவில் முன்னேறுவார். கைதிகளை விடுவிப்பதற்குக் காரணமாகத் திகழ்வார். மேலும் பூமியின் எல்லைகள் வரை புகழ் பெற்று விளங்குவார். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள்களைப் பெற்றுக் கொள்ளும். பின்னர் அவர் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவார். وَکَانَ اَمۡرًا مَّقۡضِیًّا - இது தீர்மானிக்கப்பட்டு விட்ட ஒன்றாகும்.

(மஜ்முஆ இஷ்திஹாராத் தொகுதி 1 பக்கம் 100)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ்வின் அருள் அஹ்மதிகளாகிய நம் மீது உள்ளது. நம்மில் பெரும்பான்மையான பெரியவர்களும், சிறியவர்களும் இவ்விஷயத்தைப் புரிந்து வைத்துள்ளோம். நாம் அல்லாஹ்வின் முன் நிம்மதியிழந்து நடுநடுங்கி பணிவுடன் சிரம் பணிந்து அவனிடம் துஆ வேண்டினால் அல்லாஹ் துஆக்களை செவிமடுக்கின்றான். சிலமுறை அந்நியர்களையும் கூட ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வகையிலுள்ள துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான சம்பவங்களும் நிகழ்கின்றன.**

**உலகின் பல்வேறு நாடுகளுடன் தொடர்புள்ள அஹ்மதிகளின் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்டது தொடர்பாக ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய பல்வேறு சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.**

**பாகிஸ்தானில் முல்லாக்களின் உள்ளம் இறையச்சத்திலிருந்து முற்றிலும் வெறுமையாக உள்ளது. இறைவனின் பெயரால் இறை கட்டளைகளுக்கு மாறு செய்கின்றனர். இவர்கள்தான் சமுதாயத்தில் பிளவை ஏற்படுத்தியுள்ளனர். அல்லாஹ் சமுதாயத்தின் மீது கருணை காட்டுவானாக. மேலும் இந்த அநீதியாளர்களிடமிருந்து சமுதாயத்தை விரைவில் விடுவிப்பானாக.**

**மதிப்பிற்குரிய சவுத்ரி நிஃமத்துல்லாஹ் ஸாஹி சாஹிப் (முன்னாள் சொத்து செயலர், சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, பாகிஸ்தான்) மற்றும் மதிப்பிற்குரிய ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் (பாகிஸ்தானிலுள்ள ஷேகுபூராவைச் சார்ந்தவர்) ஆகியோர் வஃபாத் ஆகிவிட்டனர். மர்ஹூம்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.**

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 26 ஜனவரி 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **சுல்ஹ்** மாதம் **26 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ. الرَّحْمٰنِ الرَّحِيمِ. مٰلِكِ يَوْمِ الدِّينِ. اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِينُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ. صِرَاطَ الَّذِينَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّينَ.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் துஆவின் தத்துவத்தை விளக்கியவாறு கூறுகின்றார்கள்: "ஒரு குழந்தை பசியால் நிம்மதியிழந்து தாய்ப்பாலுக்காக கதறும்போது தாயின் மார்பில் பால் பீறிட்டு வந்து விடுகின்றது. குழந்தை துஆவின் பெயரைக் கூட அறிந்திருப்பதில்லை. அவ்வாறிருக்க அதன் அழுகுரல் பாலை எவ்வாறு வரவழைக்கிறது?"

அன்னார் கூறுகின்றார்கள்: "சில வேளைகளில் தாய்மார்கள் தம்மிடம் தாய்ப்பால் இருப்பதாக உணர்வதில்லை என்றாலும் குழந்தையின் கதறல் தாய்ப்பாலை ஈர்த்துக் கொண்டு வருகிறது."

அவ்வாறிருக்க நாம் அல்லாஹ்வின் முன்னிலையில் அழுது கதறும்போது அது எதனையும் ஈர்த்து வராதா என்ன? நிச்சயமாக வரும். அனைத்தும் வரும். ஆனால் தத்துவஞானிகளாக இருக்கும் குருடர்களால் அதனைக் காண முடியாது. தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள தொடர்பு மற்றும் உறவை மனிதன் மனதிற் கொண்டவாறு துஆவின் தத்துவத்தை சீர்தூக்கிப் பார்த்தால் பின்னர் அது மிகவும் எளிதானதாகத் தெரிய வரும். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 129; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ்வின் அருள் அஹ்மதிகளாகிய நம் மீது உள்ளது. நம்மில் பெரும்பான்மையான பெரியவர்களும், சிறியவர்களும் இவ்விஷயத்தைப் புரிந்து வைத்துள்ளோம். நாம் அல்லாஹ்வின் முன் நிம்மதியிழந்து நடுநடுங்கி பணிவுடன் சிரம் பணிந்து அவனிடம் துஆ வேண்டினால் அல்லாஹ் துஆக்களை செவிமடுக்கின்றான். சிலமுறை அந்நியர்களையும் கூட ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வகையில் உள்ள துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான சம்பவங்களும் நிகழ்கின்றன. அதாவது, சிலமுறை எல்லா பக்கமும் நம்பிக்கையிழந்து விடும்போது நாங்கள் அல்லாஹ்வின் முன் குனிந்தால் அல்லாஹ் எப்படி எங்களுக்கு அருள் செய்தான் என்பதை ஏராளமான மக்கள் எனக்கு எழுதுகின்றனர். அதுபோன்ற பல்வேறு அறிக்கைகளில் எனக்கு வருகின்ற சில சம்பவங்களை எடுத்துரைப்பேன்.

நாஸிர் தஃவத்தே இலல்லாஹ் காதியான் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹோஷ்யார்பூர் மாவட்ட அமீர் கூறினார்கள். சில ஆண்டுகளுக்கு முன் அவர்களின் கிராமமான டோசர்வாலில் மழை பொழியாததால் கிராமவாசிகள் மிகவும் இன்னலுக்கு ஆளாகி இருந்தனர். எந்த அளவுக்கு என்றால், நீர்மட்டம் கூட மிகவும் தாழ்ந்து போனது. அங்குள்ள இந்துக்களின் பெரும்பான்மை நமது முஅல்லிமிடம் துஆ செய்யுமாறு வேண்டினர். கிழக்குப் பஞ்சாபில் முஅல்லிமை மக்கள் மியான்ஜி என அழைப்பர். அஹ்மதி முஅல்லிமிடம் துஆவிற்காக கூறினால் நிச்சயம் மழை பெய்யும் என அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது.

ஆக, நமது முஅல்லிம் அந்த மக்களுக்கு முதலில் இஸ்லாமிய துஆவின் ஒழுங்குமுறைகள் மற்றும் அல்லாஹ்வின் பண்புகளை எடுத்துக் கூறினார். பின்னர் துஆ செய்தார். அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அந்த முஅல்லிமின் துஆவை ஒப்புக் கொண்டான்.

மேலும் அவர்கள் கூறுகின்றனர்: இரண்டு மூன்று மணி நேரத்திற்குள் அல்லாஹ் தனது அருளால் தொடர் மழையைப் பொழியச் செய்தான். மேலும், தான் துஆக்களை செவிமடுப்பவன் என்பதற்கான ஆதாரத்தையும் கொடுத்தான். இந்த சம்பவத்தின் மூலம் முழு கிராமத்திலும் நல்ல தாக்கம் ஏற்பட்டது. அஹ்மதிகளின் துஆவினால் மழை பெய்தது என்பதை கிராம மக்கள் வெளிப்படையாகக் கூறினர்.

அடுத்து இதே போன்று ஃபிஜி தீவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: தவாலு சுற்றுப் பயணம் செல்வதற்கு முன் இங்கு ஒரு நீண்ட காலமாக மழை பெய்யவில்லை என்று தவாலு முபல்லிக் சாஹிப் கூறினார். தவாலு ஃபிஜி நாட்டின் ஒரு சிறிய தீவு ஆகும். சுற்றுப்பயணம் செல்வதற்கு முன் அமீர் சாஹிப் மழை பெய்வதற்காக துஆ செய்யுமாறு எனக்கும் கடிதம் எழுதியிருந்தார்.

அன்னார் கூறுகின்றார்கள்: நாங்கள் தவாலு சென்றடைந்தபோது உள்ளூர்வாசிகள் தங்களின் கஷ்டங்களை அதிகமாக நினைவு கூர்ந்தனர். தண்ணீர் முற்றிலும் எங்களுக்கு வறண்டு வருகிறது என்று கூறினர். எனவே அதே நாள் இரவில் இஷா தொழுகையில் அறிவித்தேன். தொழுகையின் கடைசி ஸஜ்தாவில் நாம் மழைக்காக துஆ செய்வோம் எனக் கூறினேன். அவர்கள் மாலையில் அந்த ஊரைச் சென்றடைந்தார்கள்.

ஆக, அல்லாஹ் அந்த துஆவை ஒப்புக் கொண்டான். இரவில் அல்லாஹ்வின் அருள் மழை பொழிந்தது. அதன் பிறகு மூன்று நான்கு முறை மழை பெய்தது. நீண்ட காலம் வறண்ட வானிலைக்கான முன்னறிவிப்பையே வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: இந்த சம்பவத்திற்குப் பிறகு நாங்கள் சென்ற இடமெல்லாம் உங்களின் வருகையையொட்டியே இங்கு மழை பெய்துள்ளது என மக்கள் அதனை வெளிப்படையாக நினைவு கூர்ந்தனர்.

கத்தோலிக்க தேவாலயத்தின் பிஷப் மற்றும் போனோபதிக் கோத்திரத்தின் ஒரு பெரும் தலைவரும் கூட இது அல்லாஹ்வின் அருள் மற்றும் ஜமாஅத்தின் கலீஃபா செய்த துஆவின் விளைவாகும். அதன் மூலமே அசாதாரண முறையில் இங்கு மழை பெய்தது என வெளிப்படையாகக் கூறினர். இந்த மழை அஹ்மதிகளின் ஈமானை அதிகரிப்பதற்கு மட்டும் காரணியாகத் திகழவில்லை. மாறாக, அந்நியர்களுக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு ஒரு அடையாளமாக ஆனது.

சில இடங்களில் மழை பொழிவது துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான அடையாளமாக ஆகி விடுகின்றது. சில இடங்களில் மழை நின்று விடுவது துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான அடையாளமாகத் திகழ்கின்றது. அந்நியர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டாலும், ஒப்புக் கொள்ளா விட்டாலும் சரி. ஆனால் இஸ்லாத்தின் இறைவன் துஆக்களை செவிமடுக்கக் கூடியவன் என்பதை நிச்சயம் ஒப்புக் கொள்கின்றனர்.

ஆப்பிரிக்காவில் கினி பஸாவு என்ற ஒரு நாடு உள்ளது. அங்குள்ள முஅல்லிம் அப்துல்லாஹ் சாஹிப் கூறுகின்றார்: நாங்கள் செங்க சாங்க் காம்ஸா கிராமத்திற்கு தப்லீகிற்காகச் சென்றோம். அங்கு மக்களை ஒன்று திரட்டி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்தோம். அவர்களுக்கு தப்லீக் செய்து கொண்டிருக்கும் போது கடும் மழை பெய்யத் துவங்கியது. மழையின் சத்தத்தின் காரணமாக எனது சத்தம் மக்கள் வரை சென்று சேராமல் போனது. மக்கள் இனி எழுந்து சென்று விடும் சூழல் உருவானது. மக்களும் செல்லத் தொடங்கினர். அப்போது நான், அல்லாஹ்வே! மழையும் உன்னுடையது; நான் கொண்டு வந்துள்ள தூதுச் செய்தியும் உன்னுடையது. ஆனால், மழையின் காரணமாக மக்கள் உனது தூதுச் செய்தியைக் கேட்க இயலாமல் எழுந்து செல்ல ஆயத்தமாகிறார்கள் என துஆ செய்து கொண்டிருந்தேன். பிறகு அல்லாஹ் மழையை நிறுத்தினான். பின்னர் அங்கிருந்த சுமார் 150 நபர்களுக்கு தப்லீக் செய்யப்பட்டது. தப்லீகிற்குப் பிறகு அங்கிருந்த அனைத்து மக்களும் பைஅத் செய்யும் நற்பாக்கியம் பெற்றனர் –அல்ஹம்துலில்லாஹ்.

இங்கு மழை நிற்பதற்கான துஆ செய்யப்பட்ட பிறகு நமது முஅல்லிமின் ஈமான் உறுதிப் –படுத்தியது மட்டுமல்லாமல், இறைவன் எப்படி தென்படுவான்? எனக் கூறும் மக்களுக்கு துஆக்களை செவிமடுக்கும் இறைவனைக் காட்டி கொடுக்கப்பட்டான். இறைவன் இதுபோன்றே தனது வல்லமையை வெளிப்படுத்தி மக்களுக்கு தென்படுகின்றான். மழையின் காரணமாக எழுந்து செல்லவிருந்த அதே மக்கள் அல்லாஹ்வின் அந்த அருளைக் கண்டு அமர்ந்து மட்டும் இருக்கவில்லை. மாறாக, உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டனர்.

இதேபோன்று பான் தோன்தோ என்ற இடத்தின் முஅல்லிம் ஹாஃபிஸ் முஸ்ஸம்மில் சாஹிப் கூறுகின்றார்: நான் உள்ளூர் முஅல்லிம் மற்றும் இரண்டு காதிம்களுடன் ஒரு கிராமத்தில் சுற்றுப்பயணம் செல்வதற்காக பயணம் மேற்கொண்டேன். வழியில் மிகக் கடுமையான மழை பொழியத் துவங்கியது. முன்னேறிச் செல்வது என்பது சாத்தியமற்றதாகத் தென்பட்டது. ஏனெனில் வழிப்பாதை மிகவும் மோசமானதாகவும் இருந்தது. எனவே, நாங்கள் ஓரிடத்தில் நின்று விட்டோம். அங்கு, அல்லாஹ்வே! உனது மஸீஹின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காகச் செல்கின்றோம். வழிப்பாதையின் அனைத்து தடைகளும் அகலும் வண்ணம் நீ அருள் செய்வாயாக என்று அங்கு துஆ செய்தோம். ஏற்கனவே தகவல் கொடுக்கப்பட்டு மக்கள் அங்கு திரண்டிருந்தனர்.

அவர் கூறுகின்றார்: அல்லாஹ் உடனடியாக எனது துஆவை செவிமடுத்தான். திடீரென மழை நின்றது. வெளிப்படையில் மழை மாலை வரை பெய்யும் என்றே தோன்றியது. அதனால் நாங்கள் மிகவும் துன்பப்பட்டோம். ஆனால் அல்லாஹ் அருள் செய்தான். மேலும் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப உரிய நேரத்தில் கிராமத்தைச் சென்றடைந்தோம். தப்லீக் மற்றும் தர்பிய்யத் நிகழ்ச்சிகளை நடத்தி முடித்தோம்.

அடுத்து, துஆவின் மூலமாக மழை நிற்பது தொடர்பான சம்பவங்களின் வரிசையில் சுவிட்ஸர்லாந்து முபல்லிக் சாஹிப் கூறுகின்றார்: ஜமாஅத் லெக்வெல் பகுதியில் பள்ளிவாயில் கட்டுவதற்கு இடம் வாங்கி இருந்தது. அங்கு அமைதிக்கான அடையாளமாக ஒரு செடி நடுதல் விழா ஒன்றிற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. அதில் மற்ற விருந்தினர்களும் அழைக்கப் –பட்டிருந்தனர். செடி நடுதல் நிகழ்ச்சிக்குரிய நாளில் வானிலை அறிவிப்பிற்கேற்ப கடும் மழை பொழிய இருந்தது. நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடும் திறந்தவெளி அரங்கில் இருந்தது. எனவே அவர்களுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்பட்டது.

அது தொடர்பாக அவர் எனக்கும் எழுதினார். அவருடைய நிறைய கடிதங்கள் வந்தன. அவர் கூறுகின்றார்: நிகழ்ச்சிக்குரிய நாளில் அவர் அங்கு சென்றபோது முதலில் கடும் மழை பெய்யத் தொடங்கியது. வெளிப்படையில் மழை நிற்பதற்கான எந்த அடையாளமும் தென்படவில்லை. ஆனால் பின்னர் துஆவின் விளைவாக அல்லாஹ் அருள் செய்தான். நிகழ்ச்சி தொடங்குவதற்கு இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. அப்போது மழை முற்றிலும் நின்று போனது. சூரியன் வெளி வந்திருந்தது. நிகழ்ச்சியின்போது உள்ளூர் கவுன்ஸில் தலைவரும் கலந்து கொண்டிருந்தார். அவர் முதலில் மிகவும் ஆச்சரியத்துடன் நீங்கள் உங்களுடைய நிகழ்ச்சிக்காக வானிலையையும் கட்டுப்படுத்தி வைத்துள்ளீர்களா? எனக் கேட்டார். நாங்கள் துஆவும் செய்தோம். எங்களது கலீஃபாவிற்கும் துஆவிற்கு கடிதம் அனுப்பினோம்.

மேலும் அல்லாஹ் அருள் செய்வான் என எங்களுக்கு முழு நம்பிக்கை இருந்தது என்று அப்போது அவருக்கு சொல்லப்பட்டது. இவ்வாறு இந்த நிகழ்ச்சி மிகவும் வெற்றிகரமாக நடந்து முடிந்தது. அதைப் பற்றிய செய்திகளை அங்குள்ள உள்ளூர் செய்தித்தாள்களும் வெளியிட்டன. அதன் மூலம் நிறைய மக்களுக்கு ஜமாஅத்தின் தூதுச் செய்தி சென்று சேர்ந்தது.

நிச்சயமாக நாம் வானிலைக்கு எந்தக் கட்டளையும் இடுவதில்லை; கட்டளையிடவும் முடியாது. எனினும் எந்த இறைவனின் கட்டளையின்கீழ் வானிலை உள்ளதோ அந்த இறைவனின் முன் நிச்சயமாக நாம் குனிகின்றோம். பின்னர் அவனே தமது வல்லமையின் காட்சிகளை வெளிப்படுத்துகிறான்.

இனி வானிலையை விட்டு விலகி துஆ ஒப்புக் கொள்ளப்பட்டதற்கான வேறு சில சம்பவங்கள் உள்ளன. அதனைப் பார்ப்போம். நமது இறைவன் வெறும் வானிலையின் இறைவன் அல்ல. மாறாக நிரந்தர ஆற்றல் பெற்றவன் மற்றும் எல்லா வகையான துஆக்களையும் செவிமடுக்க கூடியவன் ஆவான். அவனது ஏராளமான பண்புகள் உள்ளன. அவன் தனது பண்புகளின் வெளிப்பாட்டைக் காட்டுகின்றான்.

பெனின் நாட்டிலிருந்து ஜமாஅத் முஅல்லிம் மதீன் சாஹிப் கூறுகின்றார்: சில நாட்களுக்கு முன்பு ஒரு புதிய அஹ்மதி நண்பர் வந்தார். முரப்பி சாஹிப் எமது வீட்டிற்கு வாருங்கள் என அழைத்தார். எனது மனைவியின் நிலை மிக மோசமாக உள்ளது எனவும் அவர் கூறினார். எனவே நான் எனது மனைவியை அழைத்துக் கொண்டு அவரது வீட்டிற்குச் சென்றேன். ஏனென்றால், அவருடைய மனைவிக்கு பிரசவ காலமாக இருந்தது. ஒரு பெண்ணின் உதவிக்கான தேவை இருந்தது. பிரசவத்திற்கான நேரம் மிக அருகில் இருந்தது. அதே நேரம் கர்ப்பிணிக்கு மிகக் கடுமையான காய்ச்சலும் இருந்தது. கடும் காய்ச்சலின் காரணமாக கர்ப்பப் பை சுருங்கிப் போனதால் குழந்தை பிறப்பது தாமதமாகி வந்தது.

கடந்த இரண்டு முறை இவ்வாறே நடந்தது என அவர் கூறினார். ஒன்று குழந்தையை காப்பாற்றலாம் அல்லது தாயை காப்பாற்றலாம் என்ற நிலை ஏற்பட்டது. எனவே, கடந்த இரண்டு முறையும் அவர்கள் தாயைக் காப்பாற்ற முயற்சி செய்தார்கள். மேலும் பிள்ளையை தியாகம் செய்ய நேரிட்டது. தற்போது மூன்றாவது முறையாக இவ்வாறு நடக்கின்றது என அவர் கூறினார். ஜமாஅத் முஅல்லிம் அவரிடம், இதுபோன்ற சூழலில் நாம் துஆவுடன் மருந்தும் கொடுப்பதுண்டு. நமது இமாமிற்கும் துஆவிற்காக எழுதுகிறோம் என்று கூறினார். எனினும் தற்போது அதற்கான நேரமுமில்லை. துஆவிற்கான வெளிப்படையான வழிமுறையை நிச்சயமாக நாம் செய்வோம். எழுதுவதற்கு நேரம் இல்லாததால் நாம் சொந்தமாக கூட துஆ செய்வோம் எனக் கூறினார்.

அவர் கூறுகின்றார்: நான் அல்லாஹ்வின் தூய பெயர்களை நினைவு கூர்ந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயரை முன் வைத்து துஆ செய்யத் துவங்கினேன். துஆ செய்து முடிந்த பிறகு சூரா ஃபாத்திஹாவை ஓதி தண்ணீரில் ஊதினேன். அதனை அந்த பெண்ணிற்கு குடிக்கும்படி செய்தேன். இரண்டு, மூன்று முறை அவ்வாறு செய்தேன். தண்ணீரில் ஓதி ஊதி அந்தப் பெண் குடிப்பதற்காக அனுப்பி வைத்தேன். மூன்றாவது முறை கணவன் மகிழ்ச்சியுடன் வந்தார். மேலும் அல்லாஹ் எனது மனைவியையும் காப்பாற்றினான். எனது பிள்ளையையும் பாதுகாத்தான் எனக் கூறினார். அல்லாஹ்வின் அருளால் அல்லாஹ்வின் மீதும் அவனது இருப்பின் மீதும் ஈமான் அந்த புதிய அஹ்மதிக்கு இன்னும் அதிகமானது. துஆவின் மீது ஈமான் இன்னும் உறுதியானது. அப்போதிருந்து அவர் கவனத்துடனும், உருக்கத்துடனும், பணிவுடனும், துடிப்புடனும் துஆக்கள் செய்ய துவங்கினார்.

கென்யா நாட்டின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: அங்குள்ள ஒரு ஜமஅத்தின் சத்ர் சாஹிப் மிகவும் நோய்வாய்ப்பட்டுப் போனார். அவரது உடல்நலம் விசாரிக்கப்பட்டபோது இரண்டு மருத்துவமனைகள் ஒன்றும் செய்ய முடியாது என்று என்னிடம் கூறி விட்டன. தற்போது எனது உடல் நிலை மிகவும் மோசமாக உள்ளது. எப்போது வேண்டுமானாலும் உங்களுக்கு கெட்ட செய்தி வரலாம் எனக் கூறினார். அவரது உடலின் நிறமும் மிகவும் மாறிப்போனது. உடல் மிகவும் குளிர்ந்து உயிரற்றதாகத் தோன்றியது. நீங்கள் நம்பிக்கை இழக்காதீர்கள். நீங்களும் துஆசெய்யுங்கள் என அவருக்கு ஆறுதல் கூறப்பட்டது.

முஅல்லிம் கூறுகின்றார்: அவர் எனக்கும் கடிதம் எழுதினார். ஒரு வாரத்திற்குப் பிறகு நான் மீண்டும் அந்த ஜமாஅத்திற்கு ஜுமுஆ தொழுகை நடத்த சென்றபோது அந்த நபர் நன்றாக இருப்பதை நான் பார்த்தேன். அல்லாஹ் உங்களுக்கு முழுமையான குணத்தை வழங்குவான் – இன்ஷா அல்லாஹ் என்று இங்கிருந்து அனுப்பப்பட்ட எனது பதிலும் அவருக்கு கிடைத்தது.

அதன் பிறகு அவர்கள் கூறுகின்றனர்: அவரது உடல் நலம் தொடர்ந்து நன்கு தேறி வந்தது. சில காலத்திற்குப் பிறகு அவர் முற்றிலும் ஆரோக்கியம் உடையவராக ஆகி விட்டார். தனது வேலைகளை தானே செய்கிறார். எனவே, துஆவின் மூலமாக அவருக்கு அல்லாஹ்வின் புறமிருந்து ஒரு புதிய வாழ்க்கை கிடைத்துள்ளது. இந்த சம்பவமும் அவரது ஈமானை அதிகரித்துள்ளது.

அடுத்து, இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தின் மாவட்ட அமீர் எழுதுகின்றார்கள்: அங்குள்ள ஒரு ஜமாஅத்தின் தலைவருக்கு Brain tumer (மூளையில் கட்டி) ஏற்பட்டது. மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டார். இவருக்கு சிகிச்சை சாத்தியமில்லை என மருத்துவர்கள் கூறினர். அறுவை சிகிச்சை செய்யும்போது உயிரும் கூட போய் விடலாம் எனக் கூறினார். அவர் உடனே எனக்கு துஆவிற்காக எழுதினார். அல்லாஹ் குணமளிப்பானாக என்ற எனது பதிலும் அவருக்கு அனுப்பட்டது.

அவர் கூறுகின்றார்: ஒரு மாதம் கழித்து மருத்துவர் அவரை மீண்டும் பரிசோதித்தபோது வியந்து போனார். மூளையில் இருந்த கட்டி இருந்த அடையாளமே இல்லாமல் காணாமல் போனது. இது அல்லாஹ்வின் அருள் மட்டுமே ஆகும். துஆவின் விளைவே ஆகும். ஹுஸைன் சாஹிப் முழுமையான முறையில் குணம் அடைந்தார்கள்.

அடுத்து ஒரு நோயாளியைப் பற்றி பெல்ஜியம் முபல்லிக் சாஹிப் ஹாஃபிஸ் இஹ்ஸான் சிக்கந்தர் கூறுகின்றார்கள்: ஓர் அஹ்மதி நண்பர் தாவூத் சாஹிப் நோயாளியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருடைய கல்லீரலும் நுரையீரலும் செயலிழந்து இருந்தன. மறுத்துவ –மனையிலேயே அவருக்கு மாரடைப்பும் ஏற்பட்டது. அவருக்கு செயற்கை சுவாசம் வழங்கப்பட்டது. சிறிது நேரம் கழித்து மருத்துவர்கள் கை விரித்து விட்டனர். எந்தளவுக்கு என்றால் ஜனாஸா –விற்கான ஏற்பாடுகள் செய்வதற்கான விண்ணப்பத்தையும் அவரது குடும்பத்தினர் ஜமாஅத்திடம் செய்து விட்டனர்.

முபல்லிக் சாஹிப் கூறுகின்றார்: எனக்கும் அவர் துஆவிற்காக எழுதினார். நான் ஜமாஅத் மக்களிடமும் துஆவிற்கு கூறினேன். அடுத்த நாள் ஜமாஅத்தின் குழுவும் நலம் விசாரிக்க சென்றது. அதில் அன்ஸாருல்லாஹ் தலைவர், தப்லீக் செயலர் போன்றோரும் சென்றிருந்தனர். அவர்கள் நோயாளியைப் பார்க்கச் சென்றபோது பெரும் அற்புதம் நடந்து விட்டது என மருத்துவர்கள் கூறினர். நாங்கள் முன்னர் கொடுத்து வந்த மருந்தை அவரின் உடல் ஏற்றுக் கொள்ளவில்லை. தற்போது அதே மருந்து வேலை செய்யத் தொடங்கி விட்டது. மேலும் அவருடைய உடல் நலம் முன்பை விட நன்றாக உள்ளது. நான் டாக்டரிடம், இந்த அற்புதம் துஆவினால் நடந்துள்ளது எனக் கூறினேன். அல்லாஹ் இவ்வாறு புதிய வாழ்க்கையை வழங்கியுள்ளான்.

துஆ ஒப்புக் கொள்ளப்பட்டது தொடர்பாக இன்னும் வேறு சில சம்பவங்கள் உள்ளன. ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடனான தொடர்பிற்கும், ஜமாஅத்தின் உண்மைக்கும், ஜமாஅத்தின் மீதான ஈமானில் முன்னேற்றம் காண்பதற்கான காரணிகளாகவும் மக்களுக்கு இந்த சம்பவங்கள் அமைகின்றன.

சவூதியாவைச் சார்ந்த முஸ்தஃபா சாஹிப் கூறுகின்றார்: நான் உங்களிடம் எனது பணி மாற்றம் ஒரு குறிப்பிட்ட நகரத்தில் நடப்பதற்காக துஆ செய்யும் படி வேண்டினேன். அதன் மூலம் என்னால் எனது குடும்பத்தினருடன் தங்க முடியும் என நினைத்தேன். வெளிப்படையில் அது சாத்தியமற்றதாக இருந்தது. ஆனால் துஆவின் மூலம் ஒரு அற்புதம் நடந்தது. பணி மாற்றத்திற்கான ஒரு நடவடிக்கை ஆரம்பமானது. 33 –வது இடத்திலிருந்த நான் முதல் இடத்திற்கு வந்தேன். அதன் பொருள் இனி பணி மாற்றம் நடந்தால் எனக்கே வாய்ப்பளிக்கப்படும். அதன் மூலம் என்னால் குடும்பத்துடன் வசிக்க முடியும்.

அவர் கூறுகின்றார்: என்னைப் பொருத்த –வரை இது அற்புதத்தை விட குறைவான காரியமல்ல. ஒவ்வொருவரும் தத்தமது நிலையை அறிவர். வெளிப்படையில் சில விஷயங்கள் முற்றிலும் சாதாரணமானதாக தோன்றும். ஆனால் அதனை எவர் கடக்கின்றாரோ அவரே அது எப்படிப்பட்ட அசாதாரண விஷயம் நடந்துள்ளது என்பதை உணர முடியும். அல்லாஹ்வின் அருளாலும் துஆவின் மூலமும் அது நடந்தது.

தன்ஸானியா மண்டலத்தைச் சார்ந்த மொரோக்கோ பகுதியின் முஅல்லிம் சாஹிப் எழுதுகின்றார்: எங்களுடைய பள்ளிவாயிலில் இருந்த சூரிய மின்சக்தி இயந்திரத்தின் Battery –ஐ எவரோ திருடி விட்டார். அடுத்த நாள் ஜமாஅத்திற்கு தெரிந்தவுடன் போலீஸில் புகார் செய்வதற்குப் பகரமாக நாம் அல்லாஹ்விடம் துஆ செய்வோம் என ஜமாஅத் மக்கள் முடிவெடுத்தனர். போலீஸில் புகார் செய்து ஒன்றும் நடக்காது. எனவே, நாம் அல்லாஹ்விடம் துஆ செய்வதே சிறந்தது; அவனிடம் குனிவோம் என அவர்கள் நினைத்தனர். மேலும், எவர்

**M. Abdul Raoof**
✆ +91 9362 2272 29

SUCCESS INDIA
PROMOTERS

Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

**A.M. Zakir Hussain**
✆ +91 98429 41237

*METAPLAST*
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP

# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Bamboo Village
MULTI CUISINE
RESTAURANT

Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

திருடினாரோ அவருக்கு அல்லாஹ்வே தண்டனை கொடுக்கட்டும். மேலும், நமது Battery –க்களை திரும்ப கிடைக்கச் செய்யட்டும். அதற்காக துஆ செய்ய அஹ்மதிகள் முடிவெடுத்தனர். இந்த திருட்டு சம்பவத்தை அறிந்து சில அஹ்மதி அல்லாத மக்களும் ஒன்று திரண்டிருந்தனர். எனவே, எவர் திருடினாரோ அவரை அல்லாஹ் பிடித்து தண்டனை கொடுக்க துஆ செய்வதற்கு அஹ்மதிகள் முடிவெடுத்துள்ளனர் என்ற செய்தி கிராமத்தில் பரவியது. அஹ்மதிகளின் துஆக்கள் அதிகம் ஏற்றுக்கொள்ளப்படுவதுண்டு. எனவே திருடன் இனி கண்டிப்பாக பிடிக்கப்படுவான் என அஹ்மதி அல்லாதவர்களும் கூறத் தொடங்கினர். இந்த நிலையில் ஒரு நாள்தான் கழிந்திருந்தது. எவன் திருடியிருந்தானோ அவன் இரவில் யாரும் அறியாதபடி திருட்டுத்தனமாக வந்து ஜமாஅத் சதர் சாஹிபின் வீட்டருகே Battery –ஐ வைத்து விட்டுச் சென்று விட்டான். இவ்வாறு அல்லாஹ் அஹ்மதிகளின் துஆவை அல்லாஹ் செவியுற்றான். அஹ்மதியல்லாத மக்களுக்கு அஹ்மதிகள் மீதான நம்பிக்கை இன்னும் அதிகரித்தது. அஹ்மதிகள் உண்மையில் மிக நல்ல மக்கள் மற்றும் உண்மையாளர்கள் என்ற எண்ணம் கொண்டனர். எவ்வாறிருப்பினும், இதிலிருந்து ஒன்று நமக்கு தெரிகின்றது. அங்குள்ள திருடர்களின் உள்ளத்தில் கூட இறையச்சம் உள்ளது. அல்லாஹ்வின் பெயரைக் கேட்டு திருடன் அஞ்சி விட்டான்.


ஆனால் பாகிஸ்தானில் முல்லாக்களின் உள்ளம் இறையச்சத்திலிருந்து முற்றிலும் வெறுமையாக உள்ளது. இறைவனின் பெயரால் இறை கட்டளைகளுக்கு மாறு செய்கின்றனர். இவர்கள்தான் சமுதாயத்தில் பிளவை ஏற்படுத்தி –யுள்ளனர். அல்லாஹ் சமுதாயத்தின் மீது கருணை காட்டுவானாக. மேலும் இந்த அநீதியாளர்களிடமிருந்து சமுதாயத்தை விரைவில் விடுவிப்பானாக.

ஒரு சம்பவத்தைக் கூறியவாறு கினிகனாகரி முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் எழுதுகிறார்: ஒரு தூய பற்றுள்ள புது அஹ்மதி சுலைமான் ஆவார். அவர் வக்ஃப் செய்து ஜமாஅத்திற்கு தொண்டாற்ற ஆசைப்பட்டார். எனவே நாங்கள் செராலியோனில் உள்ள அஹ்மதிய்யா ஜமாஅத் ஜாமிஆவில் சேரும்படி ஆலோசனை வழங்கினோம். அவரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். அதற்காக ஆயத்தமும் ஆனார். அஹ்மதியல்லாத அவரின் பெற்றோர்களையும் மிஷன் ஹவுஸிற்கு அழைத்துப் பேசினோம். அவர்களின் ஒப்புதலையும் பெற விரும்பினோம். வெளிப்படையில் அவர்களும் மகிழ்ச்சியுற்றனர். எல்லா விவரங்களையும் எடுத்து கொண்டு இரண்டு நாட்கள் கழித்து வருவதாகக் கூறிச் சென்றனர். திரும்பிச் சென்று தமது மல்லவியுடன் அவர்கள் ஆலோசனை செய்தனர். அவர்கள் போலீஸிடம் புகார் பதிவு செய்தனர். அஹ்மதிய்யா ஜமாஅத் முஸ்லிம் அல்லாத ஒரு தீவிரவாத இயக்கம் என புகார் கொடுத்தனர். இந்த பையனையும் அது வழிகெடுத்து தீவிரவாதியாக ஆக்க முயல்கின்றது எனக் கூறினர். அதனால் எங்களுக்கு மிகவும் வேதனை ஏற்பட்டது. எனக்கும் துஆவிற்கு கடிதம் எழுதினர். எவ்வாறிருப்பினும் அல்லாஹ் அருள் செய்வானாக என நானும் பதில் அனுப்பினேன். துஆவும் செய்து கொண்டிருங்கள் என்று கூறினேன்.

அவர் கூறுகின்றார்: போலீஸ் விசாரணை நடத்தியபோது ஜமாஅத்தின் அறிமுகம் செய்து வைத்தோம். போலீஸிற்கு Leaflet எல்லாம் கொடுத்தோம். அதனால் அல்லாஹ்வின் அருளால் போலீஸ் கமிஷனர் புகாரை தள்ளுபடி செய்தார். அது மட்டுமல்ல; இவர்கள் கூறிய இஸ்லாம் மிகச் சரியானதாக தெரிகிறது. அமைதி நிறைந்ததாக தெரிகிறது. மேலும் விவரங்கள் தாருங்கள். நானும் இந்த ஜமாஅத்தில் இணைய விரும்புகிறேன் என்று போலீஸ் கமிஷனர் கூறினார்.

அடுத்து மாலி மண்டலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை முபல்லிக் சாஹிப் எழுதுகிறார்: மாலி நாட்டின் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டது. அதன் மூலம் நிறைய மக்கள் கலந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. மாநாடு நடைபெறும் இடத்திலிருந்து 400 கி.மீ தொலைவில் அந்த ஜமாஅத் இருந்தது. அங்குள்ள மக்கள் மிகவும் ஏழ்மையான மக்களாக இருந்தனர். 10,000 பிராங்க் மதிப்பை விட அதிக பயணச் செலவு ஆகும். அவ்வளவு தூரம் செல்வதற்குத் தேவையான பணத்தை ஏற்பாடு செய்வது ஓர் ஏழைக்கு பெரும் காரியமாகும். யஹ்யா சாஹிப் என்ற ஜமாஅத் உறுப்பினர் ஒருவர் உள்ளார். நதியிலிருந்து மீன் பிடித்து விற்பனை செய்து வந்தார். அவர் மிகவும் கஷ்டப்பட்டு ஒருவரின் பயணச் செலவிற்கு ஏற்பாடு செய்திருந்தார். கடந்த வருடம் நான் சென்றிருந்தேன். எனவே நான், எனது மனைவியை அனுப்பி வைக்கத் திட்டமிட்டிருந்தேன். உங்களின் நிய்யத் நல்லதுதான். ஆனால் நீங்களும் மாநாட்டில் கலந்து கொள்ள முயற்சி செய்யுங்கள் என முபல்லிக் சாஹிப் கூறினார். உங்களுக்கான பயணச் செலவிற்கு ஏற்பாடு ஆகும் வகையில் நதியிலிருந்து மீன் கிடைக்க துஆவும் செய்யுங்கள் எனக் கூறினேன். அதன்படி எந்த நாள் காலையில் மிஷன் ஹவுஸிலிருந்து பயணக்குழு புறப்பட இருந்ததோ அதற்கு முந்தைய இரவு அவர் மிஷன் ஹவுஸ் வந்தார். அவருடைய கையில் ஒரு பெரிய மீன் இருந்தது. சுமார் 12 கிலோ எடை இருந்தது. அவர் கூறினார்: நான் காலையில் நதியில் வலை வீசச் சென்றேன். அப்போது மிக அதிகமாக துஆ செய்தேன். நாளை பயணக் குழு புறப்பட உள்ளது. என்னிடம் பணம் இல்லை. அல்லாஹ்வே! நான் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு உதவி செய்வாயாக என்று துஆ செய்தேன். பிறகு நான் மாலையில் வலையை எடுத்தேன். அதில் நிறைய மீன்கள் இருந்தன. நான் கரை திரும்பியவுடன் 18,000 பிராங்க் பண மதிப்பில் அதை ஒருவர் விலைக்கு வாங்கினார். நான் அவரிடம் அனுமதி பெற்று இந்த மீனை பெற்று வந்தேன் என்று அவர் கூறினார். இதன் மூலம் கணவன், மனைவி மாநாட்டில் கலந்து கொள்ள ஏற்பாடானது. போதுமான பணம் எஞ்சியது.

அல்லாஹ் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதன் மூலம் அஹ்மதிகளுக்கு ஈமானில் உறுதிப் –பாட்டையும் கிலாஃபத்தின் மீது உறுதியான நம்பிக்கையையும் எவ்வாறு ஏற்படுத்துகிறான்? என்பது தொடர்பான தனது ஒரு சம்பவத்தை மாலி நாட்டின் ஒரு சகோதரர் எழுதுகிறார்: தாங்கள் கானாவிற்கு வந்த சமயத்தில் 2008 –ல் கிலாஃபத் நூற்றாண்டு மாநாட்டில் நான் கலந்து கொண்டேன். நான் அப்போது கோழி வியாபாரம் செய்து வந்தேன். நான் கோழிப் பண்ணையை விட்டு விட்டு மாநாட்டில் கலந்து கொண்டேன். ஆனால் நான் வந்த பிறகு கோழிகள் அனைத்தும் இறந்து போயின. எந்த மனிதனின் மூலதனத்தால் நான் அந்த வியாபாரத்தைச் செய்து வந்தேனோ அவருக்கு நான் அஹ்மதியாவேன் எனத் தெரிய வந்தது. மேலும் மாநாட்டில் கலந்து கொள்ள சென்றபோது கோழிகள் மடிந்து போயின என அவருக்கு தெரிய வந்தது. அதனால் எதிர்ப்பில் அவர் மேலும் குருடரானார். நான் ஊர் திரும்பியவுடன் ஒரு வாரத்திற்குள் நான் கொடுத்த 1,50,000 பிராங்க் ஷிபா பணத்தை திரும்பிக் கொடுக்க வேண்டும் என தகவல் அனுப்பினார். எனவே நான் மிகவும் அச்சமுற்றேன். என்னிடம் அந்த தொகை இல்லாமல் போனது. என்னை அவர் மிகவும் அவமானப்படுத்துவாரே என எண்ணி வருந்தினேன். இரவில் அதிகம் துஆ செய்தேன். அல்லாஹ்வே! எனக்கு சில ஏற்பாடுகளை செய்வாயாக. நான் உனது கலீஃபாவின் மீதான

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

அன்பில் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றேன். பிறகு எனக்கு கனவில் காட்டப்பட்டது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு டிரக்கிலிருந்து கொஞ்சம் தானியங்கள் கொட்டப்பட்டிருந்தது. அதை நான் ஒன்று கூட்டிக் கொண்டிருந்தேன்.

நான் விடியற்காலையில் கனவில் காட்டப்பட்ட அந்த இடத்திற்குச் சென்று பார்த்தபோது அங்கு டிரக் ஒன்றுமில்லை. ஆனால் தானியங்கள் கொட்டப்பட்டுக் கிடைந்தது. நான் அதனை ஒன்று கூட்டினேன். அப்போது அதிலிருநது கருப்பு நிற பை ஒன்று கிடைத்தது. அதில் 1,80,000 பிராங்க் ஷிபா பணம் இருந்தது. நான் அந்த பகுதி மக்களிடம் விசாரித்த போது, இரவில் ஒரு டிரக் ஒன்று நின்றது. அது இப்போது செனிகால் நோக்கிச் சென்று விட்டது என்று கூறினர். அவர்களிடம் நான் கூறினேன். எனக்கு இங்கிருந்து இவ்வளவு பணம் கிடைத்துள்ளது. எவருடையதோ அவர் பெற்றுக் கொள்ளட்டும் எனக் கூறி வந்தேன். ஆனால் எவரும் வரவில்லை. இந்நிலையில் கடன் கொடுத்தவர் கடன் கேட்டு வந்தார். தரக்குறைவாகப் பேசினார். நான் கூறினேன். பொறுமை செய்யுங்கள். நான் உங்கள் கடனை திருப்பிக் கொடுத்து விடுகிறேன். எனக்கு அல்லாஹ் அதற்கான ஏற்பாட்டைச் செய்து விட்டான் என்று கூறி அவருக்குரிய பணத்தை திருப்பிக் கொடுத்து விட்டேன். அவர் கூறுகின்றார்: பல ஆண்டுகள் ஆகி விட்டது. இதுவரை அந்த பணம் என்னுடையது எனக் கேட்டு எவரும் வரவில்லை.

இதே போன்று ஜெர்மனியிலிருந்து முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்: ஒரு புதிய அஹ்மதி இஹ்ஸான் சாஹிப் லெபனான் நாட்டைச் சார்ந்தவர். அவரை நான் ஜெர்மனியில் சந்தித்தேன். சந்திப்பின் போது Ashylem தொடர்பாக கூறினார். ஏனெனில் எப்போது வேண்டுமானாலும் போலீஸ் அவரை திருப்பி அனுப்பி வைத்து விடும் எனக் கூறினார். அது அந்த நபரின் ஈமானை அதிகரிக்கச் செய்தது. போலீஸை பொருத்தவரை அவருக்கு எந்த அரசியல் அடைக்கலமும் கிடைக்காது எனக் கூறியிருந்தது. அவ்வாறிருந்த போதிலும் அற்புதம் நிகழ்ந்தது. அவருக்கு மூன்று ஆண்டிற்கான அரசியல் அடைக்கலம் கிடைத்தது. தற்போது அவர் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளார். எல்லாரிடமும் துஆவின் மூலமாகவே இந்த ஏற்பாடு நடந்துள்ளது என அவர் கூறி வருகிறார்.

அஹ்மதியல்லாதவர்களுக்கும் கூட அஹ்மதிகளின் துஆ ஒப்புக் கொள்ளப்படும் காட்சிகளை அல்லாஹ் காட்டிக் கொடுக்கின்றான். அந்த சம்பவங்கள் மூலம் இஸ்லாத்தின் இறைவன் துஆவினைக் கேட்கும் இறைவன் என்பதை அந்நியர்களை ஏற்றுக் கொள்ளச் செய்கின்றது.

மிர்ஸா அஃப்ஸல் சாஹிப் கனடாவிலிருந்து எழுதுகின்றார்: ஒரு Inter Faith Conference –ற்கு நான் சென்றிருந்தேன். அதில் ஒரு Phone Book பார்த்து ஒரு சீக்கியருக்கு ஃபோன் செய்து, நாங்கள் கருத்துப் பரிமாற்றம் செய்ய விரும்புகிறோம் எனவும் கூறினேன். அதற்கு அவர் மிகவும் மன மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு அழைத்தார். வீட்டிலேயே ளுஹர், அஸ்ர் தொழுவதற்கு அனுமதி தந்தார். Inter Faith Conference –க்கு முழுமையான ஒத்துழைப்பு நல்குவதாகக் கூறினார். அப்போது அவர், எனது மகனுக்கு மூன்று பெண் பிள்ளைகள் உள்ளன. அல்லாஹ் அவருக்கு ஆண் குழந்தை வழங்க துஆ செய்யுமாறு மிக பணிவுடன் கூறினார். அங்கேயே நாங்கள் கையை உயர்த்தி துஆவும் செய்தோம். மேலும், எங்கள் கலீஃபாவிற்கும் துஆவிற்கு கடிதம் எழுதிவோம் என்றும் அவருக்கு கூறப்பட்டது. ஒரு வருடம் அல்லது ஒன்றரை வருடம் கழித்து அவரது தொலைபேசி அழைப்பு வந்தது. அல்லாஹ் அவருக்கு பேரப்பிள்ளையை வழங்கி இருப்பதாக மிகவும் மகிழ்ச்சியுடன் கூறினார்.

இது துஆக்கள் ஒப்புக்கொள்ளப்பட்ட –தற்கான சில சம்பவங்கள் ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "இயற்கைச் சட்டத்தில் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கான உதாரணங்கள் உள்ளன." தாய்ப் பாலிற்காக குழந்தையின் கதறல் கேட்டு பால் பீறிட்டு வருவது பற்றிய சம்பவம் துவக்கத்தில் கூறப்பட்டது. இது இயற்கைச் சட்டமே ஆகும். அன்னார் கூறுகின்றார்கள்: "அதே இயற்கைச் சட்டத்திற் –கேற்ப ஒவ்வொரு காலத்திலும் அல்லாஹ் உயிருள்ள உதாரணங்களை அனுப்புகின்றான்." (மல்.'.பூஸாத் தொகுதி 1 பக்கம் 199; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அந்த உயிருள்ள உதாரணங்களின் அங்கமாக மாற வேண்டுமென்றால் அதற்கு சில வழி முறைகள் உள்ளன. சில நிபந்தனைகள் உள்ளன. அதனை முழுமை செய்வது அனைவருக்கும் அவசியமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "துஆக்களின் நிபந்தனைகளில் மிகவும் முதன்மையானது நற்செயல்களும் ஆகும். மேலும் நல்லெண்ணங் –களை ஏற்படுத்த வேண்டும். எவர் தனது கொள்கைகளை சரி செய்யாமல், நற்செயல்கள் செய்யாமல் துஆவை மட்டும் செய்கின்றாரோ அவர் இறைவனை சோதித்துப் பார்க்கிறார்." (மல்.'.பூஸாத் தொகுதி 1 பக்கம் 200; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, ஈமானை கொள்கை அளவில் சீர் செய்கின்ற அதே வேளையில் செயல் நிலைகளையும் இறை கட்டளைக்கேற்ப நாம் அமைத்துக் கொள்ள வேண்டும். ஐவேளை தொழுகையின் பக்கம் கவனம் செலுத்தாமல், மக்களுக்குரிய அடிப்படை உரிமைகளை வழங்காமல், துன்பத்தில் சிக்கிக் கொள்ளும்போது மட்டும் அல்லாஹ்வின் நினைவும், மக்களுக்குரிய உரிமைகளும் நினைவுக்கு வருவதால் பயனில்லை. முன்னரே தமது நிலையை சரி செய்ய வேண்டும். அது மட்டும் போதாது. நற்செயல்களும் மேற்கொள்ளாதவரை அது போதுமானதல்ல. நற்செயல்கள் என்பது என்னவென்றால் அல்லாஹ்வுக்குரிய உரிமை –களையும் படைப்பினங்களின் உரிமைகளையும் வழங்குவது ஆகும். எனவே இந்த நிலை ஏற்பட்டு விட்டால் பின்னர் அல்லாஹ் துஆக்களையும் செவிமடுப்பான். அல்லாஹ் அவனது கட்டளைக் –கேற்ப நம் அனைவருக்கும் நமது வாழ்வைக் கழிக்கும் நற்பாக்கியத்தை வழங்குவானாக. இறை வணக்கங்கள் மற்றும் துஆவிற்கான உரிமையை எப்பொழுதும் வழங்கும் பாக்கியத்தை அல்லாஹ் வழங்குவானாக.


நான் தொழுகைக்குப் பிறகு இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையை நடத்துவேன். முதல் ஜனாஸா மதிப்பிற்குரிய சவுத்ரி நிஃமத்துல்லாஹ் சஆதி சாஹிப் உடையதாகும். அவர் ஓய்வு பெற்ற பிறகு இன்னும் சொல்லப் –போனால் அதற்கு முன்பே தமது வாழ்க்கையை அர்ப்பணித்திருந்தார். பாகிஸ்தானிலுள்ள ரப்வாவில் நாஸிம் ஜாயிதாத் செயலராக நீண்ட காலம் தொண்டாற்றினார். ஜனவரி மாதம் 15 ஆம் தேதி கனடாவில் அன்னாரின் மரணம் நிகழ்ந்தது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாரது குடும்பத்தில் ஹஸ்ரத் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபின் தாயார் மூலமாக அஹ்மதிய்யத் பரவியது. அன்னாரின் பாட்டனார் காதியான் சென்று பைஅத் செய்தார். சவுத்ரி

B. Mohamed Adil
93632 06679
99433 38000

National Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house A/c
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

சாஹிப் மர்ஹூம் அவர்களுக்கு ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் பாக்கியம் கிடைத்தது. ஹைதராபாத் மாவட்ட அமீராகவும், நாஸிம் ஆகவும், குத்தாமுல் அஹ்மதிய்யா காயித் ஆகவும் தொண்டாற்றியுள்ளார். சிறு வயது முதலே தொடர்ந்து தஹஜ்ஜுத் தொழும் பழக்கமுடையவர். இறுதி வரை அதற்காக முயற்சி செய்து வந்தார். ஜமாஅத்தான தொழுகையில் கலந்து வந்தார். கடுமையான குளிரிலும் வெயிலிலும் கூட பள்ளிவாயிலுக்கு வந்து தொழுகையை நிறைவேற்ற முயற்சி செய்வார். துஆவின் மீது உறுதியான நம்பிக்கை அவருக்கு இருந்தது. கிலாஃபத்துடன் எல்லையற்ற அன்பு இருந்தது. மாநாட்டில் கலந்து கொள்வதில் மிகவும் முன்னுரிமை வழங்கினார்.

ஒருமுறை கலீஃபா ஆவதற்கு முன்பு நான்காவது கலீஃபா அவர்கள் சுற்றுப் பயணமாக ஹைதராபாத் சென்றிருந்தார்கள். வழிப்பாதையில் சவுத்ரி சாஹிப் வீடு இருந்தது. அன்னார் அங்கு சென்று சற்று தங்கினார்கள். சவுத்ரி சாஹிப் அப்போது வெளியில் இருந்தார்கள். நான்காவது கலீஃபா அன்னாரின் மனைவியிடம், இனி மார்க்கத்திற்கு தொண்டாற்றுமாறு சவுத்ரி சாஹிபிடம் கூறுங்கள் எனக் கூறினார்கள். அன்னார் ஒரு பொறுப்பாளராக ஜமாஅத்திற்கு ஏற்கெனவே தொண்டாற்றி வந்தார்கள். ஆனால் ஒரு தூதுச் செய்தி அவருக்கு கொடுக்கப் –பட்டபோது தமது வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்து வக்ஃபிற்கு கடிதம் எழுதினார்கள்.

எப்பொழுதும் ஊழியர்களுக்கு முன்பாகவே அலுவலகம் செல்வதற்கு முயற்சி செய்வார். மிகவும் பொறுமையாளர்; நன்றியுணர்வு மிக்கவர். பிறரின் துன்பங்களை கருத்தில் கொள்ளக் கூடியவர். தனது நஃப்பிலின் மீது கட்டுப்பாடு கொண்டவர். மிகவும் மென்மையான இயல்பு கொண்டவர். வேலையில் அவர் இருந்தபோது நல்ல சம்பளம் அவருக்கு கிடைத்து வந்தது. ஆனால் ஒருபோதும் வீண் செலவு செய்ததில்லை. மிக நேர்மையாக பணியாற்றினார். அதனால் அவருடைய Textile Industry –யின் முதலாளிகள் அவர் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர். Textile Industry –யில் அவருக்கு நல்ல பெயர் இருந்தது. பிள்ளைகளுக்கு எப்போதும் காலத்தின் கலீஃபாவிற்கு கடிதம் எழுதுமாறு அறிவுரை கூறி வந்தார். அவர் தமது நினைவாக மூன்று மகள்களையும் 3 மகன்களையும் விட்டுச் சென்றுள்ளார்.

அவரது ஓர் உறவினர் எழுதுகிறார்: சவுத்ரி சாஹிபின் தந்தை சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபின் சிறிய தந்தைவழி சகோதரர் ஆவார். சவுத்ரி சாஹிபிடம் அவரது தந்தை கோபமாக இருப்பது ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்களுக்கு தெரிய வந்தது. உடனே மர்ஹூமின் தந்தைக்கு சவுத்ரி சாஹிப் கடிதம் எழுதினார்கள். நான் பாகிஸ்தானில் இருந்தபோது உங்களுக்கு உங்களது மகன் சவுத்ரி நிஃமத்துல்லாஹ் சாஹிப் மீது கோபம் இருப்பதாக எனக்கு தெரிய வந்துள்ளது. படிப்பதற்காக அவர் இங்கு இங்கிலாந்து வந்திருந்தார். அவர் இங்கு இருந்தவரை என்னை சந்தித்து வந்தார். என்னால் உறுதியுடன் கூற முடியும். அவர் மிகவும் கட்டுப்பட்டவர். தூய இயல்பு கொண்டவர். நல்லொழுக்கமிக்கவர். எனவே இப்படிப்பட்ட உங்கள் பிள்ளை மீது நீங்கள் பெருமை கொள்ள வேண்டும். அவர் வெளிநாட்டில் இருந்தவரை அவர் தூய இயல்பு கொண்டவராக இருந்தார். நான் அவர் மீது மிகவும் மகிழ்ச்சி கொண்டிருந்தேன். நான் அவருக்காக துஆ செய்து வந்துள்ளேன். இப்போதும் தொழுகையில் அவருக்காக துஆ செய்கிறேன். குடும்பத்தில் மூன்று பிள்ளைகள் இங்கிலாந்தில் கல்வி பயின்று வந்தார்கள். அவர்களில் எல்லாரையும் விட மர்ஹூம் மிகவும் தூய இயல்பு கொண்டவராக இருந்தார்.

அவருடைய அலுவலக ஊழியர் எழுதுகின்றார்: அவர் ஒருபோதும் அதிகாரியாக நடந்து கொண்டதில்லை. பரிவு மிக்கவராகவே திகழ்ந்தார். மிகவும் உயர் தரமான பணிவு இருந்தது. உலகியல் ரீதியாக பெரிய பதவியில் இருந்த போதிலும் சிறப்பான பணிவு அவரிடம் இருந்தது. உயர் அதிகாரி அவரை விட சிறிய வயதுடையவராக இருந்தபோதிலும் அவருடன் இணைந்து பணியாற்றுவார்.

ஒருவர் எழுதினார்: (அவர் சரியாகவே எழுதியுள்ளார்) அவர் வக்ஃப் செய்த பிறகு தனது இருப்பை முழுவதும் அழித்துக் கொண்டார். எல்லா வகையிலும் தன்னலமற்றவராக அவர் திகழ்ந்தார். நான் அலுவலகத்தில் அவரை சந்திக்க சென்ற போதெல்லாம் அவரை இறை தியானத்தில் மூழ்கியிருப்பதாகவே கண்டேன். ஜமாஅத் அமைப்பின் விவகாரம் வரும்போது அனைத்து தொடர்புகளையும் உறவுகளையும் ஒரு பக்கம் வைத்து விடுவார். ரப்வாவில் ஓர் அஹ்மதி ஜமாஅத் நிலத்தை அபகரித்துக் கொண்டார். சவுத்ரி சாஹிப் எனது உறவினர் ஆவார். எவரும் என்னை எதுவும் கூறக் கூடாது என்ற தாக்கத்தை ஏற்படுத்தினார். இது சவுத்ரி சாஹிபிற்கு தெரிய வந்தபோது அந்த நபருடன் மிகவும் கடுமையாக நடந்து கொண்டார்கள். இதுபோன்ற கடுமையை அன்னார் எவரிடமும் காட்டியதில்லை.

சவுத்ரி சாஹிப் கூறியதாக ஒருவர் எனக்கு எழுதுகிறார்: அன்னார் முழு வாழ்நாளிலும் மனைவியுடன் ஒருபோதும் சண்டையிட்டதில்லை. கிலாஃபத் பற்றி கூறப்படும்போது கண்களில் பொலிவு வந்து விடும். ஒருமுறை அவரின் மகனுக்கு ஓரிடத்தில் திருமண வரன் பேசப்பட்டிருந்தது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபாவிற்கு அந்த வரன் பிடித்தமானதில்லை என்று மர்ஹூமிற்கு தெரிய வந்தவுடன் தனது மகனை அழைத்து, நான் அந்த வரனை முடித்து விடு என்று கூறமாட்டேன். கட்டாயப்படுத்த மாட்டேன். ஆயினும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபாவிற்கு விருப்பமில்லை என எனக்கு தெரிந்து விட்டது. எனவே நான் அந்த திருமணத்தில் கலந்து கொள்ள மாட்டேன் என்று கூறினார்கள். அதனால் அன்னாரது மகன் தாமே அந்த திருமண வரனை முறித்து விட்டார். அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக. மேலும் அவர்களின் பிள்ளைகளுக்கு அன்னாரின் நன்மையை தொடரச் செய்ய அருள் புரிவானாக.

இரண்டாவது ஜனாஸா ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் உடையதாகும். இவர் ஷேகுபூராவைச் சார்ந்தவர். ஜனவரி 9 ஆம் தேதி அன்னாரின் மரணம் நிகழ்ந்தது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ பிறப்பால் அஹ்மதி ஆவார். அன்னாரின் தந்தை சவுத்ரி அல்லா தத்தா சாஹிப் 1928 –ல் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தார். உள்ளூர் ஜமாஅத்தில் பல தொண்டுகள் ஆற்றும் பாக்கியம் பெற்றார். தஹஜ்ஜுத் தொழுகையை தொடர்ந்து பேணி வந்தார். ஐவேளை தொழுகையையும் பேணி வந்தார். சந்தாவும் மிகவும் கவனத்துடன் செலுத்தி வந்தார். பிள்ளைகளின் தர்பிய்யத்தில் மிகவும் கவனத்துடன் இருந்து வந்தார். மர்ஹூம் தனது நினைவாக மூன்று மகள்களையும் மூன்று மகன்களையும் விட்டுச் சென்றுள்ளார். அன்னாருடைய ஒரு மகள் சாஜித் பேக் சாஹிப் பூட்டோ முரப்பி ஆவார். இன்றைய நாட்களில் ஜாமிஆ அஹ்மதிய்யா இன்டர்நேஷனலில் ஆசிரியராகத் தொண்டாற்றி வருகிறார். தனது ஜமாஅத்தின் பணிகளின் காரணமாக தந்தையின் மரணத்தின்போது பாகிஸ்தான் செல்ல முடியாமல் போனது. அல்லாஹ் அவருக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக.

அவர் கூறுகிறார்: குழந்தைப் பருவம் முதலே எனது பெற்றோர்கள் எங்களது தர்பிய்யத்தில் கவனம் கொண்டிருந்தனர். எப்போதும் தன்னுடன் என்னை பள்ளிவாயிலுக்கு அழைத்துச் செல்வார்கள். விருந்தினர் யார் வந்தாலும் மிகவும் மகிழ்ச்சியுடன் என்னை அறிமுகப்படுத்துவார்கள். நான் எனது இந்த மகளை வக்ஃப் செய்துள்ளேன். இவரை நான் ஜாமிஆவிற்கு அனுப்ப உள்ளேன் எனக் கூறுவார். அதன் தாக்கத்தால் எனக்கு வேறெந்த படிப்பைப் பற்றியும் எண்ணம் வந்ததில்லை. ஜாமிஆ செல்ல வேண்டும் என்ற எண்ணமே மிகைத்திருந்தது.

அல்லாஹ் மர்ஹூமின் நன்மைகளை அன்னாரின் பிள்ளைகளிடமும் நிலைபெறச் செய்வானாக. மேலும் அவர் எந்த உணர்வுடன் தனது பிள்ளையை வக்ஃப் செய்தாரோ அல்லாஹ் அவரது மகனுக்கு உண்மையில் வக்ஃபின் பொருளை உணர்ந்து அதனை முழுமை செய்யும் பாக்கியத்தை வழங்குவானாக. அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக. அல்லாஹ் அன்னாருடன் கருணையுடன் நடந்து கொள்வானாக.

★ ★ ★ ★ ★

## 123 -வது காதியான் ஆண்டு மாநாடு 2017 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இப்போது 126 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 123 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெறுபவர்களிடம் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்.**

*✦ **44** நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றனர் ✦ **20,048** பேர் மாநாட்டில் கலந்து கொண்டனர் ✦ ஹுஃஸூர் அவர்கள் மாநாட்டிற்காக நிகழ்த்திய நிறைவுரையின்போது இலண்டனில் **5,300** பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் ✦ தஹஜ்ஜுஃது தொழுகை ✦ திருக்குர்ஆன் தர்ஸ் மற்றும் இறைவனை நினைவு கூர்கின்ற சுற்றுச்சூழல் ✦ கண்ணியத்திற்குரிய ஆலிம்களின் பொருட்செறிவு நிறைந்துள்ள சொற்பொழிவுகள் ✦ மார்க்கத் தோற்றுனர்களின் மாநாடு ✦ கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் அறிமுக சொற்பொழிவுகள் ✦ நமது நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் பேசப்படுகின்ற பல்வேறு மொழிகளில் மொழியாக்கத்திற்கான ஏற்பாடு ✦ ஜமாஅத் சகோதர்களுக்கு அவர்களது அறிவை அதிகப்படுத்தும் வகையில் தர்பிய்யத் விஷயங்கள் அடங்கிய குறும்படம் காட்டப்பட்டது ✦ பல்வேறு அறிவு சார்ந்த தகவல்களை தரக்கூடிய வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது ✦ **32** திருமணங்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டது ✦ அச்சகம் மற்றும் மின்னனு ஊடகத்தில் மாநாடு பற்றிய கவரேஜ் ✦ அமைதி நிறைந்த நல்ல சீதோஷண நிலையில் எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக நிறைவை எட்டியது ✦ **20** முதல் **22** டிசம்பர் வரை அரபி நிகழ்ச்சியான* اِسْمَعُوْا صَوْتَ السَّمَآءِ جَآءَ الْمَسِيْحُ جَآءَ الْمَسِيْحُ *MTA இன்டர்நேஷனில் காதியானிலுள்ள ஸ்டுடியோவிலிருந்து நேரலை ஆக ஒளிபரப்பப்பட்டது ✦ **3** முதல் **5** ஜனவரி வரை "The Messiah of the Age" என்ற தலைப்பில் ஆப்பிரிக்க மக்களுக்காக நேரலை நிகழ்ச்சி MTA -வில் ஒளிபரப்பப்பட்டது*

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

7) ஜனாப் ரமேஷ் குமார் அவர்கள் (அமிர்த -சரஸிலுள்ள தர்கியானா கோவிலின் தலைமை நிர்வாகி)

இவர்கள் தமது உரையில் இவ்வாறு கூறினார்கள்: "மாநாட்டின் தலைவர் அவர்களுக்கும் மாநாடில் கலந்து கொண்டிருக்கின்ற உங்கள் அனைவருக்கும் எனது அன்பு நிறைந்த ஸலாத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நாங்கள் சனாதன் மார்க்கத்தை ஏற்றுக் கொள்பவர் -களாக இருக்கின்றோம். அது ஒவ்வொரு நபரிடமும் அமைதி மற்றும் சகோதரத்துவத்தின் போதனையை வழங்குகின்றது. எங்களது மத்தியில் வெறுப்பிற்கான எந்த இடமும் இல்லை. நான் இங்கு வந்திருக்கின்ற உங்கள் அனைவரையும் தர்கியானா கோவிலுக்கு வருமாறு அழைக்கின்றேன். நீங்கள் அனைவரும் அங்கு வாருங்கள். சுயமே நீங்கள் நாங்கள் எவ்வாறு மனித இனத்தின் நன்மைக்காகவும் அதற்கு தொண்டு புரியும் வகையிலும் பணி செய்கின்றோம் என்பதை நேரில் வந்து பாருங்கள். ஜமாஅத் எவ்வாறு உலக அளவில் மனித நேயத்திற்காக பணியாற்றுகின்றதோ நாங்கள் இப்போது அந்த அளவு பணிகளைச் செய்யவில்லை. அல்லாஹ் எல்லா படைப்பினங்களையும் ஒன்று போல் படைத்திருக்கும்போது பிறகு பிரிவினையை ஏற்படுத்துபவர்களாக நாம் ஏன் இருக்க வேண்டும்? ஒவ்வொருவரும் தத்தமது மதத்தின் போதனைகளுக்கேற்ப கண்டிப்பாக செயல்பட வேண்டும். மனிதத் தன்மை இன்று உலகிலிருந்து முடிந்து கொண்டு இருக்கிறது. மார்க்கத்தைச் சார்ந்துள்ள பொறுப்புள்ள மக்கள் அன்பு நேசத்தின் தூதுச் செய்தியை வழங்கினால் பிறகு மனிதத்தன்மை வளர்ச்சி அடையும் - இன்ஷா அல்லாஹ். நான் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நாங்கள் ஒவ்வோர் அடியிலும் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் இணைந்து நிற்போம். உங்கள் அனைவருக்கும் மிகவும் நன்றி."

8) திரு. சந்த்பாபா பாயி சஷ்யான் சிங் அவர்கள்

இவர்கள் தமது உரையில் இவ்வாறு கூறினார்கள்: "ஆண்டு மாநாட்டின் தலைவர் அவர்களுக்கும் இங்கு வருகை தந்திருக்கின்ற அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் அனைவரையும் இங்கு ஒன்றாக பார்த்ததில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. இறைவன் தனது ஒரு நபியை இந்த பஞ்சாப் மண்ணில் பிறக்க வைத்திருப்பது நமக்கு மிகவும் பெருமை சேர்க்கின்ற விஷயமாக இருக்கின்றது. அந்த நபி முழு உலகத்திற்கும் மனித நேயம் பற்றிய தூதுச் செய்தியை வழங்கி -யுள்ளார்கள். அவர்கள் எல்லா மதங்களையும் கண்ணியப்படுத்துவதை நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். ஜமாஅத் அமைதியின் தூதுச் செய்தியை உலகில் பரப்புகின்றது. எந்த நாள் எனக்கு இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்டதோ அன்றிலிருந்தே மிகவும் பொறுமையின்றி இந்த நாளுக்காக நான் கார்த்துக் கொண்டிருந்தேன். நான் உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் அனைவரது வருகையும் நல்வரவாக இருக்கட்டும். எந்த அன்பின் தூதுச் செய்தி இந்த மண்ணிலிருந்து பரவுகின்றதோ அது மிகப்பெரும் விஷயமாகும். இந்த ஜமாஅத்தின் பகுதியாக இருக்கின்ற நீங்கள் அனைவரும் மிகவும் நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றீர்கள்."

9) திரு. சந்த்பாபா சந்தோக் சிங் அவர்கள் (பஞ்சாப் கார்சேவா அமைப்பின் தலைவர்)

இவர்கள் தமது உரையில் இவ்வாறு கூறினார்கள்: "உங்களது ஜமாஅத் எங்களுக்கு மிகவும் அதிகமாக அன்பை வழங்குகின்து. எங்களை மிகவும் கண்ணியப்படுத்துகின்றது. உங்கள் அனைவருக்கும் நான் எனது ஸலாத்தை தெரிவித்துக் கொள்வதுடன் ஆண்டு மாநாட்டிற்கான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தியா - பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னர் இந்த பஞ்சாப் மாநிலத்தில் எல்லாரும் மிகவும் அன்புடனும் நேசத்துடனும் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தனர். ஆனால் பிரிவினையின்போது நடைபெற்ற துயரச் சம்பவத்தின் காரணமாக பல அப்பாவி மக்களுக்கும் தங்களது உயிர்களை இழக்க வேண்டியது வந்தது. எனவே நாம் அனைவரும் முன்னர் வாழ்ந்தது போன்றே ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பது எனது உள்ளத்திலுள்ள விருப்பமாகும்."

### 31 டிசம்பர் 2017 ஞாயிற்றுக்கிழமை

**மூன்றாவது நாளின் முதலாவது அமர்வு:**

மூன்றாவது நாளின் முதல் அமர்வின் நிகழ்ச்சிகள் மதிப்பிற்குரிய முனீர் அஹ்மது சாஹிப் ஹா∴பிஸாபாதி (வகீலுல் அ∴லா தஹ்ரீகே ஜதீது காதியான்) அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. காதியானைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஹா∴பிஸ் நகீபுல் அமீன் பர்கீ சாஹிப் அவர்கள் சூரா பனீ இஸ்ராயீலின் 79 முதல் 88 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள். அதன் மொழியாக்கத்தை மதிப்பிற்குரிய மவ்லவி மக்ஸுஃது அஹ்மது பட்டி சாஹிப் அவர்கள் படித்துக் காட்டினார்கள். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கவிதை வரிகளை பாகிஸ்தானிலுள்ள ரப்வாவைச் சார்ந்த ஜமாஅத்தின் முரப்பியான மதிப்பிற்குரிய முத்தஸிர் அஹ்மது வஸீம் சாஹிப் அவர்கள் பாடினார்கள்.

இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது நூருத்தீன் நாஸிர் சாஹிப் (ஆசிரியர் ஜாமிஆ அஹ்மதிய்யா காதியான்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அன்னாரது சொற்பொழிவின் தலைப்பு "குலா மற்றும் தலாக் தொடர்பான விவகாரங்களில் பெண்களுக்கான உரிமைகள்" என்பதாகும். அவர்கள் தமது சொற்பொழிவின் ஆரம்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் வருகைக்கு முன்னதாக பெண்களின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. மேலும், பெண் குழந்தை பிறப்பதை தங்களுக்கு ஏற்பட்ட இழிவாகவும் குறையாகவும் அம்மக்கள் கருதினர். பெண்களுக்கு எவ்வித உரிமையும் வழங்கப்பட -வில்லை என்று கூறினார்கள். மேலும், திருக்குர்ஆன் இந்த கோரமான காட்சியை இவ்வாறு படம்பிடித்துக் காட்டுகின்றது.

وَاِذَا بُشِّرَ اَحَدُهُمْ بِالْاُنْثٰى ظَلَّ وَجْهُهٗ مُسْوَدًّا وَّهُوَ كَظِيْمٌ۔ يَتَوَارٰى مِنَ الْقَوْمِ مِنْ سُوْٓءِ مَا بُشِّرَ بِهٖ ؕ اَيُمْسِكُهٗ عَلٰى هُوْنٍ اَمْ يَدُسُّهٗ فِى التُّرَابِ ؕ اَلَا سَآءَ مَا يَحْكُمُوْنَ

அவர்களுள் எவருக்காவது பெண் குழந்தை (பிறக்கும்) என்று அறிவிக்கப்பட்டால் அவர் மிகுந்த துயரத்திற்குள்ளாகி அவருடைய முகம் கறுத்து விடுகின்றது.

தனக்கு அறிவிக்கப்பட்டது கெட்ட செய்தி என்று மக்களிடமிருந்து அவர் மறைந்து கொள்கின்றார். அவர் அதை அவமானத்துடன் (உயிர்) வாழ விடுவதா அல்லது அதை மண்ணில் புதைத்து விடுவதா (என்றும் சிந்திக்கின்றார்). கவனமாக கேளுங்கள். அவர்கள் செய்கின்ற தீர்மானம் மிகக் கெட்டதாகும். (16:59-60)

ஆனால், பெண்களின் நற்பேறு எவ்வாறு இருந்தது என்றால் அவர்களின் உரிமைகளை பாதுகாத்து அவர்கள் மீது பேரருள் புரிகின்ற ஒரு மகான் பிறந்தார்கள். அவர்களே நமது தலைவரும் எஜமானருமான அகிலங்களுக்கெல்லாம் அருட்கொடையாகத் தோன்றிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்கள் ஆவார்கள். அவர்கள் மூலமாக இந்த அனைத்து அநீதிகளும் முற்றிலுமாக அழிக்கப்பட்டது. இறைவன் பெண்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளைக் கண்காணிக்கின்ற பொறுப்பை குறிப்பாக என்னிடம் ஒப்படைத்திருக்கின்றான். மனிதன் என்ற நிலையில் ஆண்களும் பெண்களும் சமமானவர்கள் ஆவர் என்று இறைவன் தரப்பிலிருந்து நான் அறிவிப்பு செய்கின்றேன் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும், உலகிலுள்ள மிகச் சிறந்த பொருள் பெண் ஆவாள். அவள் ஆணுக்கு ஆடையாக இருக்கின்றாள். ஆணின் கண்ணியமும் மகத்துவமும் அவன் தனது மனைவியுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதில் தான் அடங்கியிருக்கின்றது. ஆணின் ஈமானின் அடித்தளமானது பெண்ணுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதில்தான் இருக்கின்றது. ஆண் பெண்ணுடன் நல்ல முறையில் வாழ்க்கை நடத்தினால் அவன் நம்பிக்கை கொண்டவன் என்று அழைக்கப்படுவான். அவன் பெண்ணுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளாமல் இருந்தால் அவன் இறைவன் முன்னிலையில் அவனது தண்டனைக்கு ஆளாகக்கூடியவனாக இருப்பான் என்றும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள்.

மேலும், அன்னார் இவ்வாறு கூறினார்கள்: பெண் தனது செல்வம் தனது கணவர் மற்றும் தாய் தந்தையரின் செல்வத்திற்கும் வாரிசாக இருப்பாள். அவனது திருமணமானது சந்தேகமின்றி ஒரு தூய்மையான புனித உடன்படிக்கையாக இருக்கின்றது. ஆணும் பெண்ணும் தங்களிடையே எவ்வித செயற்கைத் தன்மையும் காட்டாமல் ஒருவர் மற்றவருடன் ஒன்றியிருந்த பிறகு அந்த உடன்படிக்கையை முறித்துக் கொள்வது என்பது மிகவும் குறையுள்ள ஒரு விஷயமாகும். அதே சமயத்தில் கணவனுக்கும் மனைவிக்குமிடையில் அவர்களது இயல்பிலேயே அபாயகரமான கருத்து வேறுபாடுகள் நிலவுவது நிரூபிக்கப்பட்டிருந்தால் அல்லது மார்க்க அளவிலும் பொருளாதார ரீதியிலும் நாகரீக அளவிலும் இயல்பிலும் அவர்களுக்கிடையில் ஒத்துப்போகாத நிலை இருந்து வந்தால் பிறகு அத்தகைய நிலையிலும் கூட இந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக தங்களது வாழ்நாளையே அவர்கள் நாசமாக்கிக் கொள்ள வேண்டும். தங்களது வாழ்க்கையின் நோக்கத்தையே அவர்கள் இழந்து விட வேண்டும் என்பது ஒருபோதும் இதன் கருத்து அல்ல.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: பெண்களுக்குரிய உரிமையை எவ்வாறு இஸ்லாம் பாதுகாத்திருக்கின்றதோ அவ்வாறு வேறு எந்த ஒரு மதமும் பாதுகாக்கவில்லை என்பது உறுதியான விஷயமாகும். சுருக்கமான சொற்களில் وَلَهُنَّ مِثْلُ الَّذِىْ عَلَيْهِنَّ அதாவது, எவ்வாறு ஆண்களுக்கு பெண்கள் மீது உரிமை இருக்கின்றதோ அவ்வாறே பெண்களுக்கும் ஆண்கள் மீது உரிமை இருக்கின்றது. (2:229) என்று இறைவன் கூறியுள்ளான். சில மக்களின் நிலைமை பற்றி கேள்வி;படுகின்றோம். அவர்கள் அந்த அப்பாவி பெண்களை கால்களில் அணியும் காலணிகள் போன்று கருதுகின்றனர். மிகவும் கேவலமான தொண்டுகளை அவர்கள் மூலம் செய்ய வைக்கின்றனர். அவர்களை ஏசுகின்றனர். அற்பமான பார்வையுடன் அவர்களை பார்க்கின்றனர். பர்தாவை பேண வேண்டும் என்ற கட்டளையை எத்தகைய அனுமதியில்லாத வழிமுறைகள் மூலமாக அவர்கள் மீது திணிக்கின்றனர் என்றால் அவர்களை உயிருடனேயே புதைத்து விடுகின்றனர். கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலுள்ள தொடர்பு இரண்டு உண்மையான நண்பர்களுக்கிடையில் உள்ள தொடர்பைப் போன்று இருக்க வேண்டும். மனிதனின் உயர்வான நல்லொழுக்கங்கள் மற்றும் இறைவனுடன் அவனுக்கிருக்கும் தொடர்பு ஆகியவற்றிற்கான முதல் சாட்சியாக இந்த பெண்கள்தான் இருக்கின்றனர். அவர்களுடனேயே இவரது தொடர்பு சரியாக இல்லாமல் இருந்தால் பிறகு இறைவனுடன் அவர் சமாதானம் செய்து கொள்வது எவ்வாறு சாத்தியமானதாக இருக்க முடியும்? ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: خَيْرُكُمْ خَيْرُكُمْ لِاَهْلِهٖ எவர் தமது மனைவியுடன் நல்ல முறையில் நடந்து கொள்வாரோ அவரே உங்களில் சிறந்தவர் ஆவார்.

இரண்டாவது சொற்பொழிவை மதிப்பிற்குரிய ஷுஹைப் அஹ்மது சாஹிப் (நாஸிர் பைத்துல் மால் கரச் காதியான்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர்களது சொற்பொழிவின் தலைப்பு “பொருள் தியாகத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் அருள்கள் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்” என்பதாகும். அவர்கள் தமது சொற்பொழிவின் ஆரம்பத்தில் சூரா அல் பக்கராவின் 262 முதல் 266 -வது வசனங்கள் வரை ஓதினார்கள்.

அதில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: தன் செல்வத்தை இறைவழியில் செலவிடுகின்றவருக்கு ஒரு தானியம் உதாரணமாகும். அத்தானியம் ஏழு கதிர்களை முளைப்பிக்கும். ஒவ்வொரு கதிரிலும் நூறு தானியங்கள் இருக்கும். தான் நாடியவருக்கு அல்லாஹ் அதிகமாகக் கொடுக்கின்றான். அல்லாஹ் தாராளமாகக் கொடுப்பவனும் நிரந்தரமான அறிவை உடையவனுமாவான்.

தங்களுடைய செல்வத்தை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறவும் தங்களைத் தாங்களே உறுதிப்படுத்திக் கொள்ளவும் செலவு செய்பவரின் உதாரணம் உயரமான இடத்தில் உள்ள ஒரு தோட்டத்திற்கு ஒப்பானது. அதன் மீது பெருமழை பெய்யவில்லையாயினும் மிகவும் குறைவான மழையே (அதற்குப் போதுமானது). அல்லாஹ் நீங்கள் செய்பவற்றின் மீது ஆழமான பார்வையை உடையவனாக இருக்கின்றான். அவர்கள் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபாக்களின் பொருள் தியாகங்கள் தொடர்பான ஒரு சில சம்பவங்களை வாசகர்களின் ஈமானை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் நாம் கீழே எழுதுகின்றோம்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு இவ்வாறு வருகின்றது: ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு லூதியானாவில் மிக முக்கியமான பிரசுரமொன்றை வெளியிடுவதற்காக 60 ரூபாய் தேவைப்பட்டது. அதே நாட்களில் அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் முன்ஷி ஸ∴பர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் லுதியானாவிற்கு வருகை தந்திருந்தார்கள். ஹுஸுர் (அலை) அவர்கள், அவர்களை அழைத்தார்கள். மேலும் அவர்களிடம் இப்போது இந்த முக்கியமான தேவை நமக்கு இருக்கின்றது. உங்களது ஜமாஅத் இந்த அளவு பணத்திற்கான ஏற்பாட்டை செய்ய முடியுமா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், ஹஸ்ரத்! இன்ஷா அல்லாஹ் செய்ய முடியும் என்று கூறினார்கள். நான் சென்று தேவையான பணத்தைக் கொண்டு வருகின்றேன் என்று கூறினார்கள். உடனடியாக அவர்கள் கபூர்தலா சென்றார்கள். மேலும் ஜமாஅத்திலுள்ள எந்த ஒரு நபரிடமும் எதுவும் கூறாமல் தனது மனைவியின் ஒரு நகையை விற்று 60 ரூபாய் பெற்று அதனை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

*குமரி மாவட்டத்தில்*
*இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்*
*பத்ர் வார இதழ் சம்பந்தமாக*
***தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:***
*1029, கேப் ரோடு (அரசப் பள்ளி எதிரில்)*
*இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.*
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com

முன்ஷி ஸஃபர் அஹ்மது சாஹிப் அவர்கள் சுயமே தனியாக இந்த தொண்டை செய்ததனாலும் அது பற்றி ஜமாஅத் சகோதரர் -களுக்கு தெரிவிக்காமல் இருந்ததனாலும் கபூர்தலா ஜமாஅத்தின் உறுப்பினராக இருந்து வந்த முன்ஷி அரோடே கான் சாஹிப் அவர்கள் ஆறு மாதங்கள் வரை முன்ஷி ஸஃபர் அஹ்மது சாஹிப் அவர்களிடம் வெறுப்படைந்திருந்தார்கள். இத்தகைய அர்ப்பணிப்பு மனப்பாங்குள்ள தோழர்களையே அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கி இருந்தான்.

ஹஸ்ரத் அம்மா ஜான் ஸய்யிதா நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா அவர்கள் தொடர்பாக இவ்வாறு வருகின்றது. அவர்கள் மினாரத்துல் மஸீஹைக் கட்டுவதற்காக ஓர் ஆயிரம் ரூபாய் வாக்குறுதியாக எழுதியிருந்தார்கள். பிறகு தில்லியிலுள்ள தமது வீடு ஒன்றை விற்று இந்த தொகையை அவர்கள் செலுத்தினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மினாரத்துல் மஸீஹ் கட்டுவதற்காக பொருள் தியாகம் செய்யுமாறு கூறிய நேரத்தில் சியால்கோட்டைச் சார்ந்த ஹஸ்ரத் மியான் ஷாதி கான் சாஹிப் அவர்கள் கட்டில்களை தவிர தமது வீட்டிலிருந்த ஏனைய எல்லா பொருள்களையும் விற்று முழு தொகையையும் ஹுஸுர் (அலை) அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்து விட்டார்கள். இதனைப் பார்த்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவாறு நீங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் முன்மாதிரியைக் காட்டி -யுள்ளீர்கள் என்று அவர்களிடம் கூறினார்கள். இதைக் கேட்டதும் அவர்கள் வீட்டிற்கு திரும்பிச் சென்றார்கள். அந்த கட்டில்களையும் விற்று அதன் மூலம் கிடைத்த முழு தொகையையும் சந்தாவில் கொடுத்து விட்டார்கள்.

இவ்வாறே சாஹிப் ஸாதா பீர் மன்சூர் அஹ்மது சாஹிப் பற்றி வழக்கறிஞரான ஹஸ்ரத் மிர்ஸா அப்துல் ஹக் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா மன்சூர் அஹ்மது சாஹிப் அவர்களே காயிதா யஸ்ஸர்னல் குர்ஆனை உருவாக்கியவர் ஆவார்கள். இந்த காயிதா எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு புகழ்பெற்று விளங்கியது. அந்த காலத்தில் நூற்றுக்கணக்கான ரூபாய்கள் மாதந்தோறும் அவர்களுக்கு வருவாயாக வந்து கொண்டிருந்தது. ஆனால், மார்க்கத்திற்காக தியாகம் செய்வதில் அவர்களின் முன்மாதிரி எவ்வாறிருந்தது என்றால் மாதந்தோறும் 30 ரூபாயை மட்டுமே அவர்கள் தமது செலவுகளுக்காக வைத்துக் கொள்வார்கள். ஏனைய தொகை முழுவதையும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடம் திருக்குர்ஆனை வெளியிடுவதற்காகவும் மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும் தேவைப்படும் செலவுகளுக்காக அனுப்பி வைத்து விடுவார்கள். 1940 -ற்குப் பிறகு பொருள்களின் விலையேற்றம் ஏற்பட்ட காலத்தில் மாதந்தோறும் 40 ரூபாயை தமது செலவுகளுக்காக அன்னார் வைத்துக் கொண்டார்கள். ஒரு வருடத்தில் மார்க்கத் தொண்டிற்காக மட்டும் பத்தாயிரம் ரூபாய் கொடுத்தார்கள்.

நாஸிர் சாஹிப் அவர்கள் தொடர்ந்து தமது சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்கள்: மிகவும் இக்கட்டான துன்பம் நிறைந்த நிலைமைகளின் போது தமது உள்ளத்தின் உணர்வுகளை தியாகம் செய்தவாறு இறை வழியில் தியாகம் செய்வது என்பது சாதாரண ஓர் விஷயமல்ல. இது பற்றிய எண்ணற்ற ஒளிமயமான உதாரணங்கள் அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் நமக்குத் தென்படுகின்றது.

பெஷாவரைச் சார்ந்த ஹஸ்ரத் காஸி முஹம்மது யூசுஃப் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் நடந்த ஒரு சம்பவம் பற்றி இவ்வாறு கூறியுள்ளார்கள். அதாவது வஸீராபாதைச் சார்ந்த ஷேக் குடும்பத்திலுள்ள ஓர் இளைஞர் வஃபாத் ஆனார். அவரது தந்தையார், மகனின் கஃபன் செலவுகளுக்காக 200 ரூபாய் வைத்திருந்தார்கள். அந்த சமயத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லங்கர் கானாவின் செலவிற்காக பொருள் தியாகம் செய்யுமாறு கூறியிருந்தார்கள். இவர்களுக்கும் அது பற்றிய கடிதம் வந்திருந்தது. அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அந்த தொகையை அனுப்பி வைத்து விட்டு எனது மகன் பிளேக் நோயினால் இறந்து விட்டான். அவனை அடக்கம் செய்வதற்கும் கஃபனுக்கான செலவு களுக்காகவும் 200 ரூபாய் வைத்திருந்தேன். அதனை இப்போது உங்களுக்கு அனுப்புகின்றேன். மகனை அவன் அணிந்திருந்த ஆடையுடன் அடக்கம் செய்து விடுகின்றேன் என்று கடிதம் எழுதியிருந்தார்கள்.

❖ இந்த அமர்வின் மூன்றாவது சொற்பொழிவை மவ்லானா ரஃபீக் அஹ்மது பேக் சாஹிப் (நாயிஃப் நாஸிர் உமுரே ஆமா காதியான்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அன்னாரது சொற்பொழிவின் தலைப்பு "ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யத்தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில் தொழுகையை நிலைநாட்டுதல்" என்பதாகும். நாஸிர் சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன், நபிமொழி மற்றும் ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் கட்டளைகளின் ஒளியில் தொழுகையின் முக்கியத்துவம் மற்றும் அதன் அருள்கள் பற்றி தெளிவாக எடுத்துக் கூறினார்கள். ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள். முதலில் தொழுகைக்கான பழக்கம் ஏற்பட வேண்டியது அவசியமானதாகும். தம்மைத்தாமே ஒவ்வொருவரும் தொழுகைகளை பேணக்கூடியவர்களாக ஆக்கிக் கொள்வது அவசியமானதாகும். தொழுகைகளினால் ஏற்படுகின்ற பலன் மனிதனின் வெளிப்படையான நிலைமையில் தென்பட்டாலும் தென்படாமல் இருந்தாலும் எந்நிலையிலும் தொழுகைகளை நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால், இவை கடமையான தொழுகைகளாகும். நான் ஒவ்வொரு நிலையிலும் அல்லாஹ்வின் பக்கமே திரும்ப வேண்டியது இருக்கின்றது. அவனிடமே செல்ல வேண்டியது இருக்கின்றது. ஒவ்வொரு தேவைக்காகவும் அவனிடமே கேட்க வேண்டியது இருக்கின்றது என்பதைப் புரிந்தவாறு தொழுகின்ற பழக்கத்தை நான் ஏற்படுத்திக் கொள்வது அவசியமானதாகும். இதில் நிரந்தர மனப்பான்மை -யுடன் ஒருவர் நிலைத்திருந்தால் பிறகு ஒரு நேரம் வரும். அப்போது தொழுகைகளுக்கான உரிமையையும் செலுத்துவதும் கூட ஆரம்பமாகி விடும். தொழுகையில் இன்பமும் கிடைக்க ஆரம்பித்து விடும். பிறகு சிலரிடம் நான் கேட்கும் போது அவர்கள் நான் தொழுவதற்கு முயற்சி செய்கின்றேன். ஆனால் சோம்பல் ஏற்பட்டு விடுகின்றது என்று அவர்கள் பதில் கூற மாட்டார்கள். தொழுகைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருக்கும்போதுதான் சோம்பல் ஏற்படுகின்றது. மேலும் அந்த சமயத்தில் அல்லாஹ் அல்லாதவற்றை மனிதன் அதிகமாக முக்கியம் வாய்ந்ததாக கருத ஆரம்பித்து விடுகின்றான். அல்லாஹ்வின் மீது முழுமையான உறுதி இருந்தால் எவ்வாறு சோம்பல் ஏற்பட முடியும்? எனவே, இன்று உலகிலுள்ள நிலைமைகளின் தீய தாக்கங்களிலிருந்து சுயமே தன்னையும் தனது சந்ததிகளையும் காப்பாற்றிக் கொள்வதற்காக அல்லாஹ்வின் பக்கம் கலப்பற்ற தன்மையுடன் குனிவது மிகவும் அவசியமான -தாகும். அவன் பக்கம் குனிவதற்கான சிறந்த வழி நமது தொழுகைகளை நிறைவேற்றுவது மற்றும் அதனை பாதுகாப்பதன் பக்கம் நான் கவனம் செலுத்துவதேயாகும் என்பதையே அல்லாஹ்வும் அவனது தூதரும் இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் எடுத்துக் கூறியுள்ளனர்.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

276, N.H. Road, Coimbatore - 641 001.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான். (16:129)

**ஜோதி அஸ்டின்**

மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

**அன்ஸருத்தீன்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் [போரிட] அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். (22:40)

**லஜ்னா இமாயில்லாஹ்**

ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)

**A. பஷீர் அஹ்மது**

பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)

**A. சம்சுல் ஆலம்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**

மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. அவர் குருடராவார். (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**

**ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax - வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்த்த(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அன்னல் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான். (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**M.Y. கன்சுல் ஆயிஷா**

சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குபடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**S.A. அப்துல் ஹக்**

சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது. (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அட்வகேட் சலீம் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**ஜலாலுத்தீன்**

சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர் -களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**

மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூமா நதீரா பேகம்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 1 March 2018 Issue No. 9

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(10-வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்: தொழுகைகளை பாதுகாப்பதும் அவற்றை கண்காணிப்பதும்தான் நம்மையும் நமது சந்ததிகளையும் பாவங்களிலிருந்தும் தவறான செயல்களிலிருந்தும் தூய்மையாக வைத்திருப்பதற்கான உத்திரவாதமாகத் திகழ்கின்றது. நான் தொழுகைகளை முறையாக பேணுவது நிச்சயமாக நமது குழந்தைகளிடம் கூட நாமும் தொழுகைகளை முறையாக பேண வேண்டும் என்ற ஆன்மாவை உருவாக்கி விடும். நமது பெற்றோர்கள் அவற்றை பாதுகாத்தது போன்றே நாமும் அவற்றை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் உருவாகி விடும். எப்போது இந்த விஷயம் இந்த குழந்தைகளின் மூளையில் பதிந்து விடுமோ, நாமும் தொழுகைகளை முறையாகப் பேண வேண்டும் என்ற உறுதியான எண்ணம் ஏற்பட்டு விடுமோ அப்போது நமது பிள்ளைகள் இந்த மேற்கத்திய சமுதாயத்தில் பரவிக் கிடக்கின்ற ஆயிரக்கணக்கான பகிரங்கமான தீமைகளிலும் அழுக்குகளிலும் வீழ்ந்து விடக் கூடாதே என்ற கவலையிலிருந்து அது பெற்றோர்களை விடுவித்து விடும். பெற்றோர்களுக்கு அவர்களது குழந்தைகள் இந்த தீமைகளில் விழுந்து விடக் கூடாது என்ற கவலை எல்லா நேரமும் இருந்து விடுகின்றது. இதற்காக அவர்களும் கூட முயற்சி செய்து கொண்டிருப்பார்கள். துஆக்கள் செய்து கொண்டிருப்பார்கள். அவர்கள் தமது குழந்தைகளை இந்த அழுக்குகளிலும் அசுத்தங்களிலும் விழுவதில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்றால் எல்லாவற்றையும் விட மிகப்பெரும் முயற்சியாக இதுவே இருக்கும். அதாவது, அவர்கள் தமது பிள்ளைகளை முறையாக தொழுகைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக ஆக்க வேண்டும்.

இது பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

اِنَّ الصَّلٰوةَ تَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ அதாவது நிச்சயமாக தொழுகையானது தீமைகளிலிருந்தும் வெறுக்கத்தக்க விஷயங்களிலிருந்தும் ஒருவரை தடுக்கின்றது. ஒரு வகையில் இந்த தொழுகைகளின் மூலமாக கலப்பற்ற தன்மையுடன் என் முன்னிலையில் வருபவர்களை இந்த உலகின் அழுக்குகளிலிருந்தும் அசுத்தங்களிலிருந்தும் பாதுகாப்பது என்னுடைய பொறுப்பாக ஆகி விட்டது என்ற உத்திரவாதத்தை அல்லாஹ் தந்துள்ளான். நான் அவர்களைப் பாதுகாப்பேன். அவர்களை நன்மைகளில் நிலைத்திருக்கும்படி செய்வேன். எனது அருட்கொடையைப் பெற்றுள்ள தூய மக்களுடன் நான் அவர்களை இணைத்து விடுவேன் என்ற உத்திரவாதத்தை இறைவன் தந்துள்ளான். எனவே, இது எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமான அடிப்படை விஷயமாக இருக்கின்றது. இதற்கான பயிற்சியையும் இந்த கடமையை நிறைவேற்ற வேண்டும் என்ற உறுதியையும் ஆண்டு மாநாட்டின் இந்த நாட்களில் நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். எவர்கள் தொழுகைகளில் பலவீனமானவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் இந்த நாட்களில் அதற்குரிய உரிமையைச் செலுத்தியவாறு தொழுகைகளை முறையாகப் பேணுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று நாஸிர் சாஹிப் அவர்கள் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார்கள்.

இதற்குப் பிறகு சிரியாவிலிருந்து வருகை தந்திருந்த ஒரு கண்ணியத்திற்குரிய விருந்தினரான மதிப்பிற்குரிய அப்துல் ∴பரஜுல் ஹுஸ்னி சாஹிப் அவர்கள் அறிமுக சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். சிரியாவிலிருந்து காதியான் ஆண்டு மாநாட்டிற்கு வருகை தந்திருக்கும் இவர்கள் ஒரு பழைய அஹ்மதி சகோதரர் ஆவார். இவர்கள் தமது தாக்கங்களை அரபி மொழியில் வெளிப்படுத்தியவாறு உரை நிகழ்த்தினார்கள். அதன் உருது மொழியாக்கத்தை மதிப்பிற்குரிய அதாவுல் முஜீப் லோன் சாஹிப் (நாயிப் நாஸிர் நஷ்ரோ இஷாஅத்) அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மதிப்பிற்குரிய அப்துல் ∴பரஜுல் ஹுஸ்னி சாஹிப் அவர்கள் தமது சொற்பொழிவில் முழு உலகிற்காகவும் இந்த சாட்சியத்தைக் கொண்டு வந்துள்ளோம். அதாவது, அல்லாஹ்வும் அவனது தூதரும் உண்மையையே கூறியுள்ளனர். وَاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ ۚ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ அதாவது, பின்னவர்களில் ஒரு ஜமாஅத் உருவாகும். அது காலத்தின் மஸீஹின் மீது நம்பிக்கை கொண்டு பொருத்தமான நற்செயல்களின் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களுடன் இணைந்து விடும். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த காலத்தின் மஸீஹ் டமாஸ்கஸிக்குக் கிழக்கே ஒரு வெள்ளை மினாராவிற்கு அருகில் இறங்குவார்கள் என்று நமக்கு தெரிவித்திருந்தார்கள். டமாஸ்கஸிற்குக் கிழக்கே தோன்றிய ஒன்றிற்கும் அதிகமான மினாராக்கள் இந்த நபிமொழியின் உண்மைக்கான ஆதாரமாகத் திகழ்ந்தனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாக்களிக்கப்பட்ட மகனான ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் டமாஸ்கஸிற்கு வருகை தந்திருந்த முதல் மினாராவாக இருந்தார்கள். அதற்கு பிறகு அன்னாரது கட்டளைக்கு ஏற்ப மவ்லானா ஜலாலுத்தீன் சாஹிப் ஷம்ஸ் அவர்கள் முபல்லிக்காக டமாஸ்கஸிற்கு வருகை தந்தார்கள். அவர்களும் ஒரு மினாராவாக இருந்தார்கள். அவர்கள் மூலமாக சிரியா நாட்டைச் சார்ந்த பல மக்களுக்கும் நேர்வழி கிடைத்தது. இவ்வாறு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டவர்களில் ஒரு நபர் இவ்வாறும் இருந்தார். அவருக்கு சிரியாவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பிரச்சாரத்தை பரப்புவதற்கும் ஜமாஅத் சகோதரர்களை ஒற்றுமையுடன் வைத்திருப்ப-தற்கும் ஜமாஅத்தை வலுவான அடித்தளத்தில் நிலைத்திருக்கும் படி செய்வதற்கான நற்பேறும் அதிகமாக கிடைத்தது. இவர்கள் முனீருல் ஹுஸ்னி சாஹிப் ஆவார்கள். இன்று நாங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஊரான காதியான் தாருல் அமானிலிருந்து வேறு வார்த்தைகளில் கூறுவதாக இருந்தால் காதியானிலுள்ள வெள்ளை மினாராவிலிருந்து எங்களது சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும் எங்களுக்கு நெருக்கமானவர்களிடத்திலும் இன்னும் சொல்வதென்றால் முழு உலகிலுள்ளவர்களையும் நோக்கி மஸீஹ் வந்து விட்டார்; மஸீஹ் வந்து விட்டார் என்ற செய்தியை கூறுகின்றோம். காலத்தின் மஸீஹிற்கு இறைவன் புறமிருந்து இறங்கிய يُصَلُّوْنَ عَلَيْكَ صُلَحَاءُ الْعَرَبِ وَاَبْدَالُ الشَّامِ அதாவது, அரபு நாட்டிலுள்ள நன்மக்களும் சிரியாவில் இருக்கின்ற நல்லவர்களும் உம்மீது தரூது ஓதுகின்றனர் என்ற இல்ஹாம் உண்மையானது என்று நாங்கள் சாட்சி கூறுகின்றோம். மேலும், இந்த இல்ஹாம் அன்னாரது உண்மைக்கு ஒரு தெளிவான ஆதாரமாக இருக்கின்றது என்பதற்கும் நாங்கள் சாட்சி கூறுகின்றோம். நான் துஆ செய்கின்றேன். அரபு நாட்டைச் சார்ந்தவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இரண்டாவது வருகை நிகழ்ந்துள்ள இந்த காலத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் ஊழியரான ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் உதவியாளர்களாக ஆகி விடுவார்களாக. நான் எனது சொற்பொழிவை டமாஸ்கஸிலுள்ள அஹ்மதி சகோதரர்கள் என்னிடம் வலியுறுத்திக் கூறிய அந்த வேண்டுகோளுடன் நிறைவு செய்கின்றேன். நான் அங்கிருந்து வந்த சமயத்தில் இந்த அருளுக்குரிய மாநாட்டில் கலந்து கொண்டுள்ள அனைவரிடமும் தங்களுக்காக துஆ செய்யும் படி கூறுமாறு அவர்கள் என்னிடம் கூறினார்கள்.

*(தொடரும்....)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad